Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 12 வியாழக்கிழமை (25-03-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:120

# ஆட்சிக்கு வந்ததும் ஏப்ரல் இறுதியில் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்போம்

## பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி ஒப்படைத்துவிட வேண்டும் என்கிறார் பிரதமர்

கொழும்பு,மார்ச்25

தமிழ் - சிங்கள புத்தாண்டு முடிந்ததும் ஏப்ரல் மாத இறுதியில் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம பிக்க எண்ணியுள்ளோம். விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனை மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் என்பன தொடர்பாக அப்போது பேசி ஓர் இணக்கத்துக்கு வருவோம்.

- இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பிரதமர் ரணிலின் 55 ஆவது பிறந்ததினம் நேற்று ஆகும். அதனை ஒட்டி 'சிரச' தொலைக்காட்சி அவரது பேட்டி நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பியது.

ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று பிரதமர் அப்பேட்டியில் உறுதிபடத் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுக்கள் என்பது நினைத்தவுடன் பேசி முடிக்கின்ற ஒருகாரியம் அல்ல. அதற்கு நீண்டகாலம் தேவைப்படும். நவம்பரில் நின்றுபோன பேச்சுக்களை ஜனவரியில் ஆரம்பிக்கவே நாம் திட்டமிட்டிருந்தோம்.

பேச்சுக்களின் போது ஜனாதிபதி சார்பில் எவரும் அழைக்கப் படவில்லை என்றும், பேச்சு மேசையில் நாங்கள் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்றும் அதன் காரணமாகப் புலிகள் பேச்சு மேசையிலிருந்து இடைநடுவில் வெளியேறினர் எனவும் ஜனாதிபதி குறைகூறியுள்ளார். அது தவறு. பேச்சுக்கள் குழமப வில்லை. ஒத்திவைக்கப்பட்டது அவ்வளவுதான்.

*கேள்வி:* நீங்கள் ஆட்சியமைத்தால் பேச்சுக்களை ஆரம்பிக்க எவ்வளவு காலஞ்செல்லும்?

*பிரதமர்:* தமிழ் - சிங்கள புத்தாண்டு முடிந்து ஏப்ரல் இறுதியில் அதனை ஆரம்பிப் போம்.

கேள்வி: பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பு பிரதிநிதித்துவம் கோருவது மற்றும் விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைக் கோருவது போன்ற சவால்களை எவ்வாறு சமாளிப்பீர்கள்?

*பிரதமர்:* பேச்சுக்களில்



(16ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு; கைது சம்பவங்களால் பரபரப்பு!

## பதில் விவசாய பீடாதிபதி சுடப்பட்டுப் படுகாயம்

மட்டக்களப்பு,மார்ச்25

**துப்பாக்கிச்சூடு மற்றும் இருவர் கைதுசெய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களால் மட்டக்களப்பில் மக்களிடையே பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டிருக்கிறது.**

**கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீட பதில் பீடாதிபதி ரீ.திருச்செல்வம் நேற்றுமுன்தினம் அவரது இல்லத்தில் வைத்து சுடப்பட்டார். இதேசமயம், மட்டக்களப்பில் இருந்தவாறு வன்னிக்கு தகவல்களை வழங்கினார்கள் என்று கூறி இருவரை கருணா தரப்பினர் கைதுசெய்திருக்கின்றனர். இந்தச் சம்பவங்களினாலேயே அங்கு பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.**

பதில் பீடாதிபதி திருச்செல்வம் மட்டக்களப்பு கல்லடி மாரியம்மன் கோயில் வீதியில் உள்ள அவரது வீட்டில் இரவு 8.30 மணியளவில் சுடப் பட்டார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இரு இளைஞர்கள் அவரது வீட்டுக்குள் நுழைந்து கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கலாநிதி திருச்செல்வம் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார். அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு அவருக்குப் பலத்த பொலீஸ் பாதுகாப்பும் வழங் கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் அவருக்கு இடுப்பில் இரண்டு காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கலாநிதி திருச்செல்வம் மட்டக் களப்பு மண்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைது சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நிகழ்ந்தது. மட்டக்களப்பு நகரில் வைத்து ஒருவரும், செங்கலடியில் வைத்து மறறொருவரும் கைது செய்யப்பட்டனர். கையடக்கத் தொலைபேசி மூலம் வன்னியுடன் தொடர்புகொணடு தகவல்களை வழங்கினர் என்று கூறியே இவர்கள் கருணா தரப்பினரால் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

திட்டமிட்டபடி பட்டமளிப்பு விழா!

## ஆங்கிலப் பாட மீள் பரீட்சைகள் ஒரு மாதத்துக்குள் நடத்தப்படும்!

### யாழ்.பல்கலைக் கழக நிர்வாகம் முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ் பல்கலைக் கழகத்தின் இறுதியாண்டு ஆங்கிலப்பாடத்தில் சித்தியடையாத 300 மாணவர்களுக்கான மீள்பரீட்சை, பட்டமளிப்பு விழா முடிந்ததும் அடுத்த ஒருமாத காலப்பகுதிக்குள் நடத்தப்படும் என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் உறுதியளித்துள்ளது.

இதனையடுத்து யாழ். பல்கலைக் கழக கலை மற்றும் வர்த்தகபீட மாணவர்கள், கடந்த இரு நாள்களாக மேற்கொண்டுவந்த போராட்ட நடவடிக்கைகளை இன்றுமுதல் கைவிடுவர் எனத தெரிவிக்கப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக இறுதியாண்டுப் பரீட்சைகளில் ஆங்கிலப் பாடத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சா/த பரீட்சைப் பெறுபேறு இணையத் தளத்தில் வெளியானது

யாழ்ப்பாணம்,மார்ச்25

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப பட்டன.

சுட்டிலக்கங்களைப் பதிவுசெய்து இணையத்தளத்தில் பரீட்சைப் பெறு பேறுகளைப் பார்வையிடுவதற்காக நேற்று பரீட்சார்த்திகள் முண்டியடித்த வாறு திரிந்ததைக் காணமுடிந்தது.

சில பாடசாலைகளில் இணையத் தளம் மூலம் பரீட்சைப் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இணைய

(16ஆம் பக்கம் பார்க்க)

# கருணா என்ற தனி மனிதனின் பலவீனம் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்தாது!

## தப்புக்கணக்குப் போட்டால் தகுந்த பாடம் கிடைக்கும் என்கிறார் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி,மார்ச்25

கிழக்கு மாகாணத்தின் தளபதியாக இருந்த கருணா நீக்கப்பட்டிருப்பது விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்தாது. கருணா விவகாரம் தனிப்பட்ட மனிதன் ஒருவரின் பலவீனமேதவிர வேறு ஒன்றும் இல்லை.

- இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தென்னிலங்கை தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

எமது அமைப்பின் ஒழுக்க விதிகளின்படி கருணா நீக்கப்பட்டார். அது ஒரு வழமையான ஒழுக்காற்று நடவடிக்கைதான். இதனை எமது இயக்கத்தில் பிளவு என்று பெரிதாக அர்த்தப்படுத்தக்கூடாது.

கருணா என்கின்ற தனி மனிதன் மீது எமது தலைமை எடுத்த நடவடிக்கை என்றே இதனைச் சொல்ல வேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அது ஒரு பலமான பாரிய அமைப்பு. அதனைப் பலவீனப்படுத்திக் குலைப்பதற்கு வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு சக்திகள் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளன.

கருணா என்கின்ற தனிமனிதனின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹெல உறுமய' யாழ். நகரில் பிரசாரம்

வடமராட்சி,மார்ச்25

தேசிய ஹெல உறுமயக் கட்சியின வேட்பாளர்களான பௌத்த பிக்குகள் இருவர் நேற்றுமாலை யாழ்ப்பாணத்தில் பிரசார நடவடிக்கைளில் ஈடுபட்டனர்.

யாழ் நகரில் பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் பஸ் நிலையப் பகுதியில் இவர்கள் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து பிரசாரத்தில் ஈடுபட்டனர். தமிழில் அச்சிடப்பட்ட பிரசுரங்களை அவர்கள் விநியோகித்ததைக் காண முடிந்தது.

பொதுத் தேர்தலில் தேசிய ஹெல உறுமயக் கட்சி யாழ் மாவட்டத்திலும போட்டியிடுவது தெரிந்ததே.

(ஐ-173)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# உயிருடன் இருப்பவர் இறந்து விட்டார் என்று வாக்காளர் இடாப்பிலிருந்து பெயர் நீக்கம்!

## விடயம் நீதிமன்றம் செல்கிறது

புத்தளம்,மார்ச்25

உயிருடன் இருக்கும் வாக்காளர் ஒருவர் இறந்துவிட்டார் என்று அவரது பெயர் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளதை நேரில் கண்ட நபர் ஆச்சரியமும், அதிர்ச்சியும், ஏமாற்றமும், கவலையும் அடைந்தார். இந்த விடயம் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. தவறுக்காக 50 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரப்போவதாகச் சம்பந்தப்பட்ட நபர் தெரிவித்தார்.

சிலாபம் தேர்தல் தொகுதியிலுள்ள விஜய கட்டுப்பொத்த என்னுமிடத்தைச் சேர்ந்தவர் ஆராய்ச்சிலாகே விஜய அப்புஹாமி, இவருக்கு வயது-45.

வருமானச் சான்றிதழொன்றுக்காகப் பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு இவர் சென்று அதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்தார். அதற்கு வாக்காளர் இடாப்பில் இலக்கம் ஒதுக்கப்பட்ட இலக்கம் தேவைப்பட்டது. வாக்காளர் இடாப்பு புரட்டிப்பார்க்கப்பட்டபோது அவரது பெயர் சிவப்பு நிற மையினால் கீறப்பட்டு இருந்தது. அவர் இறந்து விட்டார் என்ற பதிவும் இருந்தது. இவற்றை அறிந்ததும் விஜய அப்புஹாமி திடுக்குற்றார்.

வாக்காளர் இடாப்பில் பெயர் நீக்கப்பட்டுவிட்டதால் பொதுத் தேர்தலிலும் வாக்களிக்க முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டுவிட்டது. இது குறித்து தேர்தல் ஆணையாளர், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி, மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுக்கு அவசர கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

பொதுத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை தமக்கு வழங்கப்பட வேண்டுமென்று அப்புஹாமி கோரியுள்ளார்.

உரிமை கிடைக்காவிட்டால் 50 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வேன் என்றும் அவர் சொன்னார். (எ-க)

# வரட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் போராட்டம்

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நிவாரணம் கோரி திருகோணமலை பிரதேச செயலகத்தின் முன் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

விவசாயிகள் 2003ஆம் ஆண்டு வங்கியில் கடன்பெற்று விவசாயம் செய்தார்கள். கடும்வரட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டது. வரட்சியால் மட்டுமன்றி, யானைகள் மற்றும் தம்பலகாமம் பிரதேச கால்நடைகளாலும் பெரும அழிவு ஏற்பட்டது.

சுமார் 200 விவசாயிகள் தாம் பெற்ற இக்கடன் தொகைகளை மீளச்செலுத்த முடியாதுள்ளனர்.

2002ஆம் ஆண்டிலும் விவசாயிகள் நஷ்டமடைந்தனர்.

நஷ்டமடைந்த அனைவரும் நிவாரணம் வழங்கவேண்டும் எனவும் அடிப்படை வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்றும் கோரியே விவசாயிகள் பதாதைகள் சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூவினங்களையும் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். கப்பல்துறை, விவசாய சம்மேளனம் என்பன முன்னின்று போராட்டத்தை நடத்தின. கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதேச செயலரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (எ-க)

# தேர்தல் தொடர்பான பணிகளுக்கு 1,400 பஸ்கள்

கொழும்பு,மார்ச்25

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது மேற்கொள்ளப்படும் அரச காரியங்களுக்காக இலங்கை போக்குவரத்துச் சபையின் கொத்தணி பஸ்கள ஆயிரத்து 400 வழங்கப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் யு.எல்.எம்.பாரூக் தெரிவித்துள்ளார்.

டயர் மற்றும் உதிரிப்பாகங்கள் இல்லாமல் பஸ் டிப்போக்களில் முடங்கிப் போயிருக்கும் 800இற்கும் அதிகமான பஸ்களுக்கு டயர்களும் மற்றும் தேவையான உதிரிப்பாகங்களும் பொருத்தப்பட்டு அவை தேர்தல் தொடர்பான அரச காரியங்களுககுப் பயன்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (எ-க)

# ஈ.பி.டி.பி.-படையினர் இணைந்து பிடித்துச் சென்ற மகன் எங்கே?

## மண்டைதீவைச் சேர்ந்த தந்தை முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்25

ஈ.பி.டி.பியினரும் படையினரும் இணைந்து பலவந்தமாகப் பிடித்துச் சென்ற தனது மகனை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி மண்டைதீவைச் சேர்ந்த தந்தை ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

1990ஆம் ஆண்டு தீவுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின்போது தனது மகனை படையினரும் ஈ.பி.டி.பியினரும் பலவந்தமாக அழைத்துச் சென்றனர் என்றும் -

பின்னர் அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை எனவும் அந்தத் தந்தை தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டிருக்கின்றார்.

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிறிஸ்தோபர் விமலதாஸ் (வயது-23) என்பவரே இவ்வாறு கூட்டிச் செல்லப்பட்டபின் காணாமற் போய விட்டார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக 92ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமையகத்துக்குச் சென்று அந்த அமைப்பின் செயலாளர் நாயகத்தினைச் சந்தித்து முறையிட்டதாகவும் -

தீவுப்பகுதியில் இருந்து கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என்று அப்போது அவர் உறுதியளித்தார் என்றும் -

இளைஞனின் தந்தை தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ-7)

# பொலீஸாரின் திடீர் இடமாற்றங்களை இடைநிறுத்த ஆணைக்குழு பரிந்துரை

கொழும்பு,மார்ச்25


பொலீஸாரைத் திடீரென இடமாற்றம் செய்வதை இடைநிறுத்துமாறு பொலீஸ் திணைக்களத்துக்கு பொலீஸ் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

அண்மைக்காலமாக பொலீஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகளாகக் கடமைபுரிந்த பலர் எவ்வித முன்னறிவித்தலுமின்றி இடமாற்றம் செய்யப்பட்டனர். இது தொடர்பாகப் பொலீஸ ஆணைக்குழுவுக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்தன.

கல்முனை பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொறுப்பதிகாரி ஏ.எச்.எம்நாஸீமின் இடமாற்றம் குறித்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொலீஸ் ஆணைக்குழுவுக்குச் சென்று தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தார்.

பொலீஸார் இடமாற்றம் செய்யப்படுவதை இடைநிறுத்துமாறு செய்துள்ள பரிந்துரையை அடுத்த அறிவிப்பு விடுகக்கப்படும்வரை செம்மையாகக் கடைப்பிடிக்குமாறு பொலீஸ் ஆணைக்குழு கேட்டுள்ளது.

அண்மைக்காலமாக விரும்பத்தகாத வகையில் பல பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மேலிடத்து உத்தரவுக்கு அமைய இடமாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பொலீஸ் ஆணைக்குழு கேட்டிருக்கிறது. (எ-க)



யாழ். பல்லைகலைக்கழக இறுதியாண்டு ஆங்கிலப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் பட்டமளிப்பு விழாவை பிற்போடுமாறுகோரி கடந்த 2 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். நேற்றையதினம் அவர்களால் இராமநாதன் மண்டப வாயில் பூட்டப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

### கல்யாண மண்டபத் திறப்பு விழா

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வீதியில் புதிதாக நிறுவப்பட்ட கல்யாண மண்டபத் திறப்பு விழாவும், அமரர்களான மாணிக்கம்-பாக்கியம் ஞாபகார்த்த கலை கலாசார மண்டபத்திறப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளன.

மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபைத் தலைவர் செ.தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மேற்படி கட்டடங்களை நிறுவுவதற்கு நிதியுதவி வழங்கிய மா.சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன, நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம், தெய்வசித்தன இ.நடராசா, மஞ்சவனப்பதி முருகன் ஆலயப் பெறுநர் வே.நடராஜா மற்றும் பலர் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ)

# சிறுமியை வல்லுறவு புரிந்தவருக்கு 10 வருடங்களுக்கு கடூழியச் சிறை!

பதினாறு வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகச் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு யாழ் மேல்நீதிமன்றம் 10 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்திருக்கின்றது.

1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் மயிலங்காடு ஏழாலை தெற்கில் வசிக்கும் 16 வயதுச் சிறுமி ஒருத்தியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அதே ஊரைச் சேர்ந்த புவனேஸ்வரன் ரூபன் என்பவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் இடம்பெற்றது.

விசாரணைகளின் முடிவில் எதிரியை குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி, அவருக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். குறிப்பிட்ட அபராதத் தொகையைச் செலுத்தத் தவறும பட்சத்தில் மேலும் ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

18 வயதிற்குக் குறைந்த பெண்ணுடன் விரும்பியோ, விரும்பாமலோ உடலுறவு கொள்வது தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டவிதிகளுக்கு அமைய இத்தண்டனை வழங்கப்படுவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். (ஐ-5)

# நேற்று ஒரு நாள் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் அணி வெற்றி

யாழ்.மத்தியகல்லூரிக்கும் - சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 57 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் ஆட்டத்தின தொடர்ச்சியாக இடம்பெறும் இந்த ஒரு நாள் ஆட்டம் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்ஜோன்ஸ் கல்லூரி அணித தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடுவதாகத் தீர்மானித்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. அதில் பி.சகிந்தன், ரி.மதன்ராஜ் ஆகியோர் தலா 30 ஓட்டங்களையும், எஸ். நிருபன் 20 ஓட்டங்களையும் எம். மயூரன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் 6 ஓவர்கள் பந்து வீசிய எம்.யசோதரன் 30 ஓட்டங்களையும் ஆர்.மதுசன் 10 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 4 வீரர்கள் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தனர். 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கலலூரி அணி, 36.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற்று 57 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

மத்திய கல்லூரி சார்பாக எஸ். தினேஸ் 19 ஓட்டங்களையும், விரஜவகுமார் 18 ஓட்டங்களையும், எம்.யசோதரன் 12 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் எம்.மயூரன், ரி.சி. அன்றூ ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம். மயூரன் தெரிவுசெய்யப்பட்டார். (ஐ-5)



நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சென்றல் - சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ் அணியினரிடம் வெற்றிக்கிண்ணம் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# கசிப்பு உற்பத்தி செய்த வழக்கில் மூவருக்கு கடூழியச் சிறைத்தண்டனை

## யாழ். நீதிமன்று நேற்று விதித்தது

யாழ்ப்பாணம்,மார்ச்25

கசிப்பு உற்பத்தி செய்தமை தொடர்பான வழக்கில் மூவருக்கு யாழ். நீதிமன்றம் கடூழியச்சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டின் பேரில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த ஜெயரத்தினம் ஜெயமணி, தர்மலிங்கம் ரோஸ்மலர், பாலகிருஷ்ணன் இராசு ஆகிய மூவரையும் கைது செய்த கோப்பாய் பொலீஸார் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றன. விசாரணையின் இறுதியில் இந்த மூவரும் தமது குற்றங்களை ஏற்றுக்கொண்டனர்.

இவர்களில் தர்மலிங்கம் ரோஸ்மலர், பாலகிருஷ்ணன் இராசு ஆகிய இருவருக்கும் தலா 4 வருட சிறைத் தண்டனை விதித்த நீதிவான், தண்டப் பணமாக தலா ஒருலட்சம் ரூபா செலுத்துமாறும் - தவறும்பட்சத்தில் மேலும் தலா இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் தீர்ப்பில் தெரிவித்தார்.

அதேபோல, ஜெயரட்ணம் ஜெயமணி என்பவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான், 50 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாகச் செலுத்துமாறும் தண்டப் பணம் செலுத்தத் தவறும் படசத்தில் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

இதேவேளை, அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்த மூவருக்கு யாழ். நீதிமன்று 15 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

றக்கா வீதி, சுண்டுக்குழியைச் சேர்ந்த ஐயாத்துரை குலசிங்கம், நீர்வேலியைச் சேர்ந்த சோமன் கணபதி மற்றும் அரியாலையைச் சேர்ந்த கந்தையா தவராசா ஆகிய மூவரையும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராசா உத்தரவிட்டார். (எ-5)

# ஹமாஸ் இயக்கத்துக்குப் புதிய தலைவர்; பழிவாங்கப் போவதாக அவர் சூளுரை!

லண்டன்,மார்ச்25

இஸ்ரேலினால் ஹெலித் தாக்குதல் மூலம் படுகொலை செய்யப்பட்ட ஷேக் அகமட் யாஸினின் இடத்துக்கு புதிய தலைவர் ஒருவரை ஹமாஸ் தேர்ந்தெடுத்துள்ளது.

பலஸ்தீனியர்களின் இஸ்லாமியத் தீவிரவாத இயக்கமான ஹமாஸின் ஆன்மீகத் தலைவராக விளங்கி வந்தவர் யாஸின். இஸ்ரேல் கடந்த திங்களன்று இலக்குவைத்து நடத்திய தாக்குதலில் அவர் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே.



அப்துல் அஸிஸ் - அல் - ரண்டிஸி

அவரின் இடத்துக்கு, ஹமாஸின் காஸாப் பிரதேசத் தலைவராக அப்துல் அஸிஸ் - அல் - ரண்டிஸி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் இதுவரை காலமும் ஹமாஸின் இரண்டாம் மட்டத் தலைவராகவும் பேச்சாளராகவும் விளங்கி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொல்லப்பட்ட அகமட் யாஸினுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காஸாவில் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் ரண்டிஸி உரையாற்றினார்.

இஸ்ரேலுக்குத் தகுந்த பாடத்தைப் புகட்டுவதற்காக தமது அணியினரை ஐக்கியமாக ஒன்று திரளுமாறு அப்போது அவர் அழைப்பு விடுத்தார். இஸ்ரேல் இனிமேல்தான் தனக்குப் பாதுகாப்பு ஏதும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ளப் போகின்றது என்றும் அவர் சொன்னார். ஷேக் யாஸினின் படுகொலைக்குப் பழி வாங்குவதற்கு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் முழு மூச்சுடன் - முனைப்புடன் - முன்வரவேண்டும் என்றும் அவர் கோரினார். "எல்லா இடங்களிலும், எல்லா வழிவகைகளையும் பயன்படுத்தித் தாக்குதல் நடத்துவதற்கு உங்களுக்கு வாசல் திறந்தே இருக்கின்றது" - என்றார் அவர்.

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரண்டிஸி (வயது 56) ஒரு டாக்டராவார். முன்னர் இஸ்ரேலினாலும் அதைத் தொடர்ந்து யஸீர் அரபாத்தின் பலஸ்தீன அதிகார சபையினாலும் சிறைவைக்கப்பட்டார் அவர்.

கொல்லப்பட்ட ஷேக் யாஸினின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்று குறிப்பிட்ட ரண்டிஸி, தங்களது பிரதான இயக்கத்தின் தலைவராக டமாஸ்கஸில் தங்கியுள்ள காலிட் மேஷால் தொடர்ந்தும் பணிபுரிவார் என்றும் ஹமாஸின் அரசியல் பிரிவை அவரே வழி நடத்துவார் என்றும் மேலும் கூறினார்.



கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுவதற்காக 8 அடி உயரத்தில் உருவாக்கப்பட்ட 'ஸ்ட்ரோபெரி' வடிவிலான பட்டர் கேக் இது. பிலிப்பின்ஸில்லா டிரினிடாட் நகரத்தில் உள்ள வெதுப்பகத்தில் இது செய்யப்பட்டது. கேக்கின் அடிப்பகுதி 16 அடி அகலமும் 24 அடி நீளமும் கொண்டதாகும்.

# அடுத்த இலக்கு யஸீர் அரபாத்?

ஜெருசலேம்,மார்ச்25

இஸ்ரேலின் அடுத்த இலக்கு பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தும், ஹிஸ்புல்லா தலைவர் ஹஸ்ஸன் நஸ்ருல்லாவும்தான் என்று இஸ்ரேலிய ராணுவத் தளபதி மோஷி யாலோன் தெரிவித்தார்.

ஹமாஸ் நிறுவுநரும் ஆன்மீகத் தலைவருமான ஷேக் யாசீன், காஸா நகரில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவருக்கு நேர்ந்த கதிதான் அரபாத்துக்கும், நஸ்ருல்லாவுக்கும் ஏற்படும். இதை அவர்களே உணர்ந்து கொண்டுள்ளனர் என்று யாலோன் டெல் அவிவ் நகரில் நேற்று ஒரு பேட்டியில் தெரிவித்தார்.

இதனிடையே, ஏவுகணைத் தாக்குதலில் யாசீன் கொல்லப்பட்டாலும், அரபாத்தைக் கொல்லும் திட்டம் எதுவும் இஸ்ரேல் அரசுக்கு இல்லை என்று இஸ்ரேலியப் பாதுகாப்புத் துறை துணை அமைச்சர் ஜுவ் போம் தெரிவித்தார். (ஒ)

# வேட்பாளர் தேர்வில் அதிருப்தி; தமிழகக் காங்கிரஸில் குழப்பம்

சென்னை,மார்ச்25

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழகக் காங்கிரஸ் வேட்பாளர் தேர்வில் அகில இந்தியப் பொதுச் செயலர் கமல்நாத் அநீதி இழைத்து விட்டார் என்று கூறி தலைவர்கள் கூட்டத்திலிருந்து மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வெளிநடப்புச் செய்தார்.

இதேவேளை, கமல்நாத்துக்கு எதிராக தனுஷ்கோடி ஆதித்தன் உட்படத் தமிழகக் காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் டில்லியில் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட தமிழக காங்கிரஸ் கட்சியின் 8 வேட்பாளர்கள் பட்டியல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அறிவிக்கப்படும் எனக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் கபில் சிபல் அறிவித்திருந்தார்.

இதற்கிடையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் அரசியல் ஆலோசகர் அகமது படேல், பொதுச் செயலர் ஒஸ்கர் பெர்னாண்டஸ், தமிழக பொறுப்பாளரும் செயலருமான தல்ஜீத் சிங் ஆகியோர் வாசனை அழைத்துப்பேசினர்.

கமல்நாத் ஏற்கனவே முடிவு செய்திருந்த வேட்பாளர் பட்டியலை அவரிடம் அவர்கள் காட்டியதாகத் தெரிகிறது. ஆனால், அந்தப் பட்டியலை வெளியிட்டால், தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி இடம்தெரியாமல் போய் விடும் என்று வாசன் கடும் ஆட்சேபம் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

அத்துடன், எந்தத் தகுதியும் இல்லாத, கட்சிக்கு தொடர்பில்லாத நபர்களை வேட்பாளர்களாக அறிவிப்பதில் எந்த நியாயமும் இல்லை. இந்தப்பட்டியலில் உள்ள வேட்பாளர்களுக்காகப் பணியாற்றுமாறு தொண்டர்களைச் சம்மதிக்க வைக்க முடியாது என்று வாசன் கோபமாகக் கூறிவிட்டு, அக்கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்துவிட்டார்.

ஒரு மாதத்துக்கு மேலாக டில்லியில் முகாமிட்டுள்ள காங்கிரஸ் பிரமுகர்களும், தொண்டர்களும் இதை அறிந்து கொதிப்படைந்தனர். உடனடியாகக் கட்சித் தலைமையகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஓ)

உலக அரங்கில்

# கின்னஸ் சாதனையாளர் பாம்பு கடித்து உயிரிழப்பு!



பாங்கொக்,மார்ச்25

விஷப்பாம்புகளுடன் ஒரே கூண்டுக்குள் 7 நாள்கள் தங்கியிருந்து கின்னஸ் சாதனை படைத்த பூன்ரியுவ்பாசான் (வயது 34) தன் வளர்ப்புப் பாம்பு கடித்து இறந்தார். இச்சம்பவம் தாய் லாந்தின் ஸிலிஸா கெட் மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது என்று அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் தெரிவித்தார்.

தாய்லாந்தைச் சேர்ந்த பூன்ரியுவ் பாசான் ஏராளமான விஷப் பாம்புகளுடன் ஒரு வாரம் ஒரே கூண்டுக்குள் தங்கியிருந்து கின்னஸ் சாதனை படைத்தவர். 1998இல் அவர் அச் சாதனையை நிகழ்த்தினார். அதற்காக கின்னஸ் உலகச்சாதனைப் புத் தகத்தில் அவரது பெயர் இடம்பெற்றது. அவர் சொந்தமாக 30 பாம்பு களை வீட்டில் வளர்த்து வந்தார். அண்மையில் தனது கிராமத்தை அடுத் துள்ள காட்டில் புதிதாக ஒரு நாக பாம்பைப் பிடித்துவந்தார். அதையும் சேர்த்து வளர்த்துவந்தார். அதைக் கடந்த வியாழக்கிழமை தமது கிராம மக்களுக்குக் காட்டி, வித்தை காட் டிக்கொண்டிருந்தபோது, அப்பாம்பு அவரைக் கடித்து விட்டது. உடனே அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவர் இறந்தார். (ஒ)

## உலக வர்த்தக மைய தாக்குதல் குறித்து விசாரணை ஆரம்பம்

வாஷிங்ரன்,மார்ச்25

அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடம் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டமை தொடர்பான இரண்டாவது கட்ட விசாரணைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதற்கென அமைக்கப்பட்ட குழு விசாரணைகளை மேற்கொள்கிறது.

உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய வர்த்தக மையத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணையில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் கொலின் பவல், ராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆமிடேஜ் ஆகியோர் சாட்சியமளித்திருந்தார்கள். இந்த விசாரணைக்குழு தனது முதற்கட்ட விசாரணையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன், தற்போதைய ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் ஆகியோரது அரசுகள் ஒசாமா பின் லேடனையும் அவரது சகாக்களையும் ஒடுக்கத் தவறிவிட்டன என்று குறை கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# பழனி ஆலய விக்கிரக விவகாரம்; சென்னை நீதிமன்றில் மனுத்தாக்கல்

சென்னை,மார்ச்25

இந்தியாவில் உள்ள ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழனி தண்டாயுதபாணி கோயிலில் புதிதாக வைக கப்பட்டுள்ள சிலையை அகற்றுவது குறித்து 3 மாதங்களுக்குள் தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும் என்று சென்னை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிலையை அகற்ற வேண்டும் என்று சென்னை அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த வடபழனி சித்தர் சென்னை நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனுவில் கூறியிருந்ததாவது:

பழனி கோயிலில் ஜனவரி 26 ஆம் திகதி இரவோடு இரவாகப் புதிய தண்டாயுதபாணி சிலை அமைக்கப்பட்டது. இதுபோன்ற சம்பவம் இதற்கு முன் இந்தியாவில் நடைபெற்றதில்லை. இது ஆகமவிதிகளுக்குப் புறம்பானது.

மூலஸ்தானத்தில் இருக்கும் நவ பாஷாண சிலைக்கு முன் புதிய சிலை வைக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் மத உணர்வைப் புண்படுத்துகிறது.

பொதுமக்களுக்குத் தெரியாமல் இரகசியமாகப் புதிய சிலை வைக்கப்பட்டுள்ளது. இதனால் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும். புதிய சிலை வைக்கும் திட்டம் இல்லை என தமிழக அரசு அளித்த உறுதி மீறப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ)

# செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி மார்ச் 29இல் ஒரே நேர்க்கோட்டில்

சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் ஆகிய நான்கு கிரகங்களும் ஒரே நேர் கோட்டில் அணிவகுக்கின்றன.

32 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இந்த அரிய நிகழ்வு மார்ச் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தகவலை புதுடில்லி நேரு கோளரங்கத்தின் இயக்குநர் டாக்டர் என்ரத்னஸ்ரீ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இரவு வானில் மேற்கு - கிழக்குக் கோட்டில் அவை அணிவகுத்துக் காட்சியளிக்கும் சூரியன், சந்திரனுக்கு அடுத்த படியாக வானத்தில் மிகப் பிரகாசமாகத் தெரியக்கூடிய கிரகம் வெள்ளிக் கிரகம்தான். அதை மேற்கு வானில் சூரியன் அஸ்தமித்த உடனேயே காணலாம்.

எனவே, முதலில் வெள்ளிக் கிரகத்தைப் பார்க்க வேண்டும். அதற்குச் சிறிது மேலே செவ்வாய்க் கிரகம் காட்சி தரும். அதற்கு மேலே சனிக் கிரகத்தைக் காணலாம். அதற்கு மேலே கிழக்காகப் பார்த்தால் வியாழன் கிரகம் தெரியும். வெள்ளிக்கிரகத்துக்குக் கீழே புதன் கிரகத்தைப் பார்க்கலாம்.

சூரியன் மறைந்து இரவு கவியும் வானில் வெள்ளி, செவ்வாய், சனி, வியாழன் ஆகிய கிரகங்களை சாதாரணமாகப் பார்க்க முடியும். அவற்றொடு புதன் கிரகமும் சேர்வதுதான் மார்ச் மாத விசேடமாகும்.

மார்ச் 29ஆம் திகதி இந்த அபூர்வ அணிவகுப்பை வெறும் கண்களால் பார்க்க முடியும் என்றபோதிலும், தொலை நோக்கி மூலம் பார்த்தால், வியாழன் கிரகத்தில் நிலவுகள், சனி கிரகத்தைச் சுற்றி இருக்கும் வளையங்கள் மற்றும் புதன் கிரகத்தின் பல நிலைகளையும் தெளிவாகப் பார்க்க முடியும் - என்றார் அவர். (ஒ)

## அகதிகள் நிதியத்துக்கு உதவி அதிகரிப்பு

சிட்னி,மார்ச்25

ஐ.நா.சபையின் அகதிகள் நிதியத்திற்கு வழங்கும் அன்பளிப்புத் தொகையை ஆஸ்திரேலியா அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் ஆஸ்திரேலியா 95 லட்சம் ஆஸ்திரேலிய டொலரையே வழங்கிவந்தது. இத்தொகை இவ்வாண்டு தொடக்கம் ஒரு கோடியே 26 லட்சம் ஆஸ்திரேலிய டொலராக அதிகரித்துள்ளது.

இந்த நிதியின் மூலம் ஹொங்கொங், இந்தியா, இந்தோனேஷியா, கிழக்குத் தீமோர், மலேஷியா, பிலிப் பைன்ஸ், தாய்வான், கம்போடியா, வியட்னாம், சீனா ஆகிய நாடுகளுக்கு அதிகமான உதவிகளை வழங்கமுடியுமென ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரும், ஐ.நா.அகதிகள் ஆணைக் குழுவின் பேச்சாளருமான அலெக் சாண்டர் டௌனர் தெரிவித்துள்ளார். (ஒ-ரி)

## வயிற்றில் 12 மணிநேர சத்திரசிகிச்சை

# ஏழரை மாதக் குழந்தைக்கு 8 உறுப்புக்கள் மாற்றப்பட்டன

மியாமி, மார்ச்25

இத்தாலியைச் சேர்ந்த ஏழரை மாதக் குழந்தை ஒன்றுக்கு வயிற்றுப் பகுதியில் சத்திரசிகிச்சை செய்து எட்டு உறுப்புக்கள் மாற்றப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் மியாமி நகரில் ஜாக்சன் மருத்துவ மையத்தில் அண்மையில் 12 மணிநேரம் இந்த சத்திரசிகிச்சை நடத்தப்பட்டு உறுப்புகள் மாற்றப்பட்டன.

இத்தாலியின் ஜெனோவா நகரைச் சேர்ந்த அக்குழந்தையின் பெயர் அலிசியா பிறக்கும்போதே வயிற்றில் ஜீரண உறுப்புக்களும், சிறுநீரகமும் அக்குழந்தைக்கு சரியாக வேலை செய்யவில்லை.

இதையடுத்து வயிறு, கல்லீரல், மண்ணீரல், கணையம், சிறுகுடல், பெருங்குடல், இரு சிறுநீரகங்கள் ஆகியவை சத்திரசிகிச்சை மூலம் மாற்றப்பட்டன.

குழந்தைக்கு 8 உறுப்புக்களை மாற்ற இத்தகைய சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது உலகிலேயே இதுதான் முதன்முறை என்று ஜக்ஸன் மருத்துவமனை டாக்டர்கள் கூறினர் (ஒ-க)

## சீனாவில் பூமியதிர்ச்சி

பெய்ஜிங்,மார்ச்25

சனாவின் தென்பகுதிப் பிராந்திய மான மொங்கோலியாவில் நேற்றுக் காலை இலங்கை நேரப்படி 9.30 மணிக்குப் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சேத விவரங்கள் அறிவிக்கப்படவில்லை.

5.9 றிச்டர் அளவில் பதிவுசெய்யப்பட்டுள்ள இந்த பூமியதிர்ச்சியின் காரணமாக சிலீக்கன் உற்பத்திப் பிரதேசமான 640 கிலோமீற்றர் பரப்பளவு பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 6.7 றிச்டர் அளவிலான பூமியதிர்ச்சியில் 10 பேர் உயிரிழந்ததோடு 700 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# SHAMEERA'S
## Herbul beauty Care
40/2, Temple Road,
Chundikuli, Jaffna.

**பெண்களுக்கு மட்டும்**

பட்டமளிப்பு விழாவில் பங்குபெறுவோருக்கான சிகை அலங்காரமும் முகஒப்பனையும் செய்துகொள்வதற்கு விரும்புவோர் முன்கூட்டியே பதிவுகளைச் செய்துகொள்ளலாம்.

*குறிப்பு:~*
பட்டமளிப்பு விழாவுக்கான விசேட சலுகையாகக் குறைந்த கட்டணத்தில் Facial செய்யப்படும்.

தொடர்புக்கு:-
0777-190774
0777-722056
021-222 2472

(30009)(37-11-19-34)

---

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
வங்கியியல் கற்கைநெறிகள்
**B.Sc.(Hons) Degree & ACIB**
**DBF,ACBF,CBF(CIB/IBSL)**
Medium - Tamil & English Exam:- March & September
Minimum Requirement:- GCE O/L 6 Passes (5C)& GCE A/L 2Passes
விண்ணப்ப முடிவுதிகதி:- 05.04.2004

## External Degree
(Jaffna University & Peradeniya University)
GAQ | 1st in Com. | B.A. | B.Com.
Minimum Requirement:-GCE A/L 3 Passes
வகுப்புக்கள் ஆரம்பம்:-27.03.2004

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept.**
*464,Hospital Road,*
*(Near Commercial Bank),*
*Jaffna.*
(C/33812-34-11-19)

---

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாளை பின்வரும் இடங்களில் நாய்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சாவகச்சேரி நகரசபை வளவினுள்ளும், மு.ப. 11.15 தொடக்கம் 12.30வரை கல்வயல் டெனிஜா முன்பளளி அருகிலும் பகல் 12.45 தொடகக்கம் 2.30 மணிவரை நுணாவில்மேற்கு அம்பாள் ச.ச.நிலையத்திலும் தடுப்பு மருந்து வழங்கப்படுமெனப் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.மணிவர்ணம் அறிவித்துள்ளார். (ம-117)

---

**உ**
**வசந்தி கோயில் என விளங்கும்**
**பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்**
## வருடாந்த உற்சவம்

**அம்மன் அடியார்களே!**
இன்று (25.03.2004) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கொடியேற்றம்
04.04.2004 ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர நாளில் தீர்த்தோற்சவம்
05.04.2004 திங்கட்கிழமை பங்குனி 4 ஆம் திங்கள்
குளிர்த்தி - விசேட அபிஷேக ஆராதனைகள்
அடியார்கள் வருக! அம்மன் அருள் பெறுக!!
☞ நேர்த்தி செய்யும் அடியார்கள் தமது நேர்த்திகளைப் பூர்த்திசெய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

*ஏழலை மத்தி,*
*ஏழாலை.*
கு.வசந்தி அம்மன்.
(30014)(37-34-11-19)

---

# 5ஆவது பிறந்த நாள் வாழ்த்து
## HAPPY BIRTH DAY



அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
செல்வன்
## K.தவராசா தனுராஜ்
## (25-03-2004)

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
கீ.தெய்வேந்திரன் (தவராசா) - பிரமிளா
தம்பதிகளின் செல்வப் புதல்வன் தனுராஜ்

தனது 5ஆவது பிறந்த நாளை இன்று (25-03-2004) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை அப்பா தவராசா, அம்மா பிரமிளா, அப்பப்பா கீதபொன்கலன், அகஸ்ரீன், ஞானப்பெற்றோர், சந்திரன் மேரிறஞ்சினி, அண்ணாமார்களான ஜீவராஜ், சத்தியராஜ், அக்காமார்களான மேரிஸ்ரெலா, தர்சிகா, சுவீடனில் வசிக்கும் சித்தப்பா உதயன், சித்தி இன்கா, அத்தை சுபாஜினி, அப்பம்மாமார், அப்பப்பாமார், அம்மம்மாமார், அம்மப்பாமார், பெரியத்தை, சின்னத்தை, மாமாமார், அத்தைமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திப்பாமார், சித்திமார், சகோதரர்கள், சகோதரிகள், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள் அனைவரும் புனித அந்தோனியார் அருள் பெற்று நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

அல்லைப்பிட்டி,
2ஆம் வட்டாரம்.
(29794) (26-34-11-19)

தகவல்:
**கீ.தெய்வேந்திரன்**
(தவராசா - அப்பா)

---

# மலையக மக்களின் புதுவாழ்விற்கு புத்துயிர் கொடுத்த தலைவன் சங்கரி



★ 1977,1983 இன் இனக்கலவரத்தால் அடிபட்டு துரத்தப்பட்டவர்கள் நாம்......
★ கலவரத்தால் சொத்திழந்து, சுகமிழந்து, வாழ்வைத் தொலைத்து விட்டுவந்தவர்கள் நாம்.....
★ எமது எதிர்காலம் என்னவாகும் என்ற ஏக்கத்துடன் வந்தவர்கள் நாம்........

**கிளிநொச்சி மண் எங்களை வரவேற்கிறது.......**
**பசுமையான மருதநிலமிது...........**



வீ.ஆனந்தசங்கரி
1

இ.சங்கையா
5

- எம்மைப் பாதுகாத்து, தங்குமிட வசதி செய்து கொடுத்தவர் சங்கரி
- எமக்கு நிலம் தந்து அதனை உறுதியாக்கித் தந்தவரும் ஆனந்தசங்கரிதான்
- நீதிகாத்து, நிரந்தர வாழ்வு தந்து எம்மை கல்வியால் நிமிர வைத்தவரும் இவர்தான்
- மலையக வாழ்வின் விடியலுக்காய் ஏங்கிய நாம்.....
- கிளிநொச்சி மண்ணின் சகலவளங்களையும் எமதாக்கிக் கொண்டோம்.

**இவை அத்தனைக்கும் உரிய பெருமகன் .....எம் தலைமகன்........**

# வீ.ஆனந்தசங்கரி (தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான

# சுயேச்சைக் குழு :1 | X | 4 | 8

விளம்பர அனுசரணை :- கிளிநொச்சி மாவட்ட முன்னாள் மலையக மக்கள்

குறிப்பு : எக்காரணங்கொண்டும் சுயேச்சைக்குழு 01 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளாது என உறுதியாகத் தெரிவிக்கின்றோம். வீண் வதந்திகளைத் தயவுசெய்து நம்பவேண்டாம்.

உதயன்

## வேடம் கலைகிறது

"மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் அல்லது மத்தியஸ்தர்கள் ஊடாக மட்டுமே சிங்களத் தலைமையுடன் தொடர்புகளை வைப்பது என்பதில் புலிகள் இயக்கம் உறுதியாக உள்ளது. அதற்கு மாறாகப் புலிகளுடன் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் முயன்றால் புலிகள் அதை நிராகரித்து விடுவார்கள்."

- இப்படித் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து தாம் தொடர்புகளைப் பேணி வருகின்றார் என்ற சாரப்பட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பரப்புரை செய்து வருகையில், அந்தக் கூற்றை அடியோடு புறந்தள்ளும் வகையில் இக்கருத்தை வெளியிட்டிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

தமது கருத்துக்கு தமிழ்ச்செல்வன் கூறிய காரணமும் இங்கு முக்கியமாக நோக்கற்பாலது.

"ஜனாதிபதியுடன் விடுதலைப் புலிகள் எந்தவிதமான இரகசியத் தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்வதில்லை.

"1995ஆம் ஆண்டு இடம்பெற்ற சமாதானப் பேச்சுகள் மூலம் நாம் பெற்றுக்கொண்ட அனுபவப் பாடங்கள் - பட்டறிவுகள் - காரணமாக அப்போதே எமது தலைமைப்பீடம் உறுதியான - திட்டவட்டமான - ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இனிமேல், ஸ்ரீலங்கா அரசுடன் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சமாதான முன்னெடுப்பையும் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன்தான் - அல்லது மத்தியஸ்தத்துடன்தான் - மேற்கொள்வதென அப்போதே நாங்கள் முடிவு செய்துவிட்டோம்" - என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

1995இல் ஏற்பட்ட கசப்புணர்வே விடுதலைப் புலிகளை இவ்வாறான ஒரு முடிவுக்குத் தள்ளியது என்பது தெளிவு. அந்தநிலையை ஏற்படுத்தியவர் யார்? ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான். அவர்தான் அப்போது புலிகளோடு சமரச முயற்சியில் ஈடுபட்டார்.

சுமார் எட்டு மாதங்கள் நடந்த சமரச முயற்சி எந்தப் பலனும் அளிக்காமலேயே முறிந்தது. உக்கிரச்சண்டை மூண்டது. அடுத்த ஆறு மாதத்துக்குள் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றின இலங்கைப் படைகள்.

சுமார் பத்து வருடங்களாக, பலம் வாய்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸா போன்ற ஜனாதிபதிகளின் கீழ் செய்யமுடியாத இராணுவச் சாதனையை - குடாநாட்டைக் கைப்பற்றுவது என்ற பெரும் படை நகர்வை - புலிகளுடன் சண்டை வெடித்து ஆறு மாத காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செய்துமுடித்தார்.

எட்டு மாதப் பேச்சுக் காலத்தில் - சமரச முயற்சி வேளையில் - தமிழர் தரப்புக்கு வாக்குறுதி அளித்த விடயங்கள் எதனையும் நிறைவேற்றாமல் ஏமாற்றி வந்த சந்திரிகா அரசு, அந்தச் சமயத்தில் யுத்தத் தயாரிப்பிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வந்தது என்று புலிகள் அந்தநேரத்தில் சுமத்திய குற்றச்சாட்டு, அடுத்த ஆறு மாதத்தில் அதன் இராணுவப் பெறுபேறு மூலம் அம்பலமாகியது.

அத்தகைய பட்டறிவைத் தந்த ஜனாதிபதியுடன், மீண்டும் ஒரு தடவை நேரடி இரகசியத் தொடர்புகளுக்கு இணங்கித் திரும்பவும் மூக்குடைவதற்குப் புலிகள் என்ன முட்டாள்களா?

சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடுமா என்ன?

எனவே, புலிகள் இது விடயத்தில் தெளிவாக இருக்கின்றார்கள் என்பது தமிழ்ச்செல்வனின் பேட்டியில் அப்பட்டமாக வெளிப்படுகின்றது.

தென்னிலங்கைத் தேர்தல் களத்தில் இன்று மையக் கருத்தே நாட்டின் அமைதியும் சமாதானமும் பற்றியதே.

சமாதானத்தையும் அமைதியையும் யார் ஏற்படுத்துவார்கள் என்று மக்கள் நம்புகின்றார்களோ அவர்களுக்குத்தான் தெற்கில் வாக்கு என்ற நிலைமை மேன்மேலும் உறுதியாகிக்கொண்டே செல்கிறது.

இந்தச் சூழ்நிலையில் வாக்குகளைச் சுருட்டுவதற்குச் 'சமாதான தேவதை', 'அமைதி விரும்பி' என்ற வேடங்களையெல்லாம் போட வேண்டியவராக இருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அந்த வேடத்துக்குத் தகுந்த மாதிரியான தோற்றத்தை ஏற்படுத்தவே புலிகளுடன் தொடர்ந்து தாம் தொடர்புகளை வைத்திருக்கின்றார் என்ற கதையை அவர் அவிழ்த்துவிட்டார்.

ஆனால், உண்மையை அம்பலப்படுத்தி, ஜனாதிபதியின் குட்டைப் போட்டு உடைத்துவிட்டார் தமிழ்ச்செல்வன். சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டிய கருத்தை அவரின் செவ்வி தெளிவுபடுத்தியிருக்கும் என நம்பலாம்.

### நீதியான தேர்தலை நடத்தும் ஏற்பாடுகளுக்கு

# புலிகள் விட்டுக் கொடுப்பதற்குத் தயார் ஆனால் இராணுவம் இணங்கவில்லை!

## 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் தகவல்

கொழும்பு,மார்ச்25

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்று நடைபெறவேண்டும் என்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்புடன் செயற்படமுன்வந்துள்ளனர். ஆனால், இராணுவத்தரப்பில் இருந்து இதுவரை சாதகமான பதில் கிட்டவில்லை என 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ கவலை தெரிவித்தார். புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் அப்பால் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள காவலரண்களில் இருந்து ஐந்நூறு முதல் ஆயிரம் மீற்றர் தூரம் வரை பின்னோக்கி நகர்த்தவும் அப்பிரதேசங்களில் இராணுவத்தினரோ அல்லது பொலீஸாரோ தேர்தல் கடமைகளுக்காக ஆயுதங்களுடன் வருவதை அனுமதிக்கவும் தயார் எனப் புலிகள் தெரிவித்தனர். ஆனால், இராணுவத் தளபதியுடன் பேசியபோது இவ்விடயம் தொடர்பாக சாதகமான பதிலை அவர் தரவில்லை என்றார் கிங்ஸ்லி ரொட்ரிகோ.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்று நடைபெறவேண்டும் என்ற நோக்குடன் நாட்டின் பலபாகங்களிலும் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கை தொடர்பான இரண்டாவது அறிக்கையை 'பவ்ரல்' அமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

கொழும்பு 'ட்ரான்ஸ் ஏஸியா' ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த இரண்டாவது அறிக்கை வெளியிடப்பட்டது. அதையொட்டி அங்கு தெரிவிக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:-

டாக்டர் ஜெஹான் பெரேரா தலைமையிலான குழுவினர் கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்தனர். அரசியல் கட்சிகளின் தலைவர்கள், இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் புலிகள், புத்திஜீவிகள், பொதுமக்கள், மாணவர்கள், அகதிமுகாம்களில் தங்கியுள்ளோர் எனப் பல மட்டத்தினரையும் அவர்கள் சந்தித்தனர்.

சுமார் 20 வருடங் களுக்குப் பின் இப்பிரதேச மக்கள் சுதந்திரமான தேர்தல் ஒன்றில் கலந்துகொள்வதில் ஆர்வங்கொண்டுள்ளனர். இப்பிரதேசங்களில் ஈ.பி.டி.பி., ஆனந்தசங்கரியின் சுயேச்சைக்குழு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன தேர்தல் நட டிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஈ.பி.டி.பியினர் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களில் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

ஆனந்தசங்கரி குழுவினர் பத்திரிகை அறிக்கைகள் மூலம் தேர்தல்பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர். இவ்விரு கட்சிகளின் வேட்பாளர்கள் யார் என்பதைக் கூடப் பெரும்பான்மையான மக்கள் அறிந்திருக்கவில்லை. அதற்கான வாய்ப்பும் இல்லை.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டணியினர் மட்டுமே வீடு வீடாகச் செல்லவும் சுதந்திரமாக மக்களைச் சந்திக்கவும் கூடியதாக இருக்கின்றது. அதேவேளை, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டணி தவிர வேறு கட்சிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் வாய்ப்புகள் இல்லை. ஈ.பி.டி.பி. தலைமை வேட்பாளருடன் பேசியபோது தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளூர் தமிழர்களை ஈடுபடுத்தவேண்டாம் எனவும், வெளிமாவட்டங்களில் இருந்து முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் ஈடுபடுத்தவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுக்கின்றார். நம்மவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்றும் சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் தாங்கள் நம்புகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார் என டாக்டர் ஜெஹான் பெரேரா கூறினார்.

கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர்கள் சந்தித்தனர்.

இம்முறை தாங்கள் தேர்தல் நடவடிக்கைகளில் நேரடியாகவே பங்குகொள்கின்றார்கள் என்றும் தமது பிரதேச மக்களின் தனிமனித உரிமை மறுக்கப்படக்கூடாது என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையிலேயே தங்களுடைய எல்லைப் பிரதேச காவலரண்களில் இருந்து ஐந்நூறு முதல் ஆயிரம் மீற்றர் தூரம் வரை விலகிச்செல்லவும், அப்பிரதேசங்களில் அரச படையினர் ஆயுதங்களுடன் தேர்தல் கடமைகளில் ஈடுபட அனுமதிக்கவும் புலிகள் தயார் எனத் தெரிவித்தனர். இதன் மூலம் புலிகளின் பிரதேச மக்கள் எந்தவிதச் சோதனைச் சிக்கலுமின்றி அவர்கள் பிரதேசத்திலேயே வாக்களித்துவிட்டுத் திரும்பிச்செல்ல முடியும் என தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார். புலிகளின் கோரிக்கை நியாயமானதாக இருந்தது. ஆனால், படைத்தரப்பில் இது ஏற்கப்படவில்லை. - இப்படி அங்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

(ம)

# இடம்பெயர்ந்த மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்து ஐ.நாவுக்கு மகஜர்

## மனித உரிமைகளுக்கான தமிழ் அமைப்பு அனுப்பியது

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் வாழ்க்கை நிலை மிகவும் மோசமாகவே இருந்து வருகிறது என்று மனித உரிமைகளுக்கான தமிழ் அமைப்பு ஐ.நாவிடம் முறையிட்டுள்ளது. மேற்படி அமைப்பின் பொதுச்செயலாளர் எஸ்.கிருபாகரன் இதுதொடர்பாக ஐ.நாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த மக்களின் நடமாடும் உரிமைகள்கூட மறுக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டு வருகிறார்கள்.

"போர் நிறுத்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டுத் தற்பொழுது 24 மாதங்களாகிவிட்டன. அதன்படி ஆயுதப்படைகள் பொதுமக்களிற்குச் சொந்தமான எல்லாக் கட்டடங்களிலிருந்தும் வெளியேறியிருக்கவேண்டும். ஆனால், அப்படி நடக்கவில்லை. ஆயிரக்கணக்கான" இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளில் போய்க்குடியமர இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

வணக்க ஸ்தலங்கள் நாசமாக்கப்பட்டிருப்பது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. வடக்கு - கிழக்கில் 2 ஆயிரத்து 76 இந்து ஆலயங்களும், 299 கிறிஸ்தவ தேவாலயங்களும் கடந்த 20 ஆண்டுகளாகச் சேதமாக்கப்பட்டுள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன.

சமீபகாலமாக கிறிஸ்தவ தேவாலயங்களை நாசமாக்கும் செயற்பாடுகள் தீவிரமாகி வருகின்றன. கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின்படி 89 கிறிஸ்தவ ஆலயங்கள் கல்லெறிக்குள்ளாகியுள்ளன அல்லது எரிக்கப்பட்டும் நாசமாக்கப்பட்டும் உள்ளன. மிகப்பிந்திய தகவல்களின்படி சில தனியார் ஒலிபரப்பு நிலையங்களினதும் வேறு ஊடக நிலையங்களினதும் அனுமதிகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

கருத்துச் சுதந்திரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்படும் ஒவ்வொரு தமிழரும் தாக்கப்பட்டும் வதைக்கப்பட்டும் குற்றவாக்குமூலம் பெறப்படுகிறார்கள். இவர்களிடம் கட்டாயப்படுத்தி எடுக்கப்படும் வாக்குமூலங்கள் அவர்களுக்குப் புரியாத சிங்கள மொழியில் எழுதப்பட்டு கையெழுத்துப் பெறப்படுகின்றது. 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கைதுசெய்யப்பட்ட 76 கைதிகள் இன்னமும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண் கைதிகளும் அடங்குவர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# வடக்கு வைத்தியசாலைகளுக்கு ஜப்பானிய அரசு 3 அம்புலன்ஸ்கள்

- திருகோணமலைச் செய்தியாளர் -

திருகோணமலை,மார்ச்25

ஜப்பானிய அரசு வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா வைத்தியசாலைகளுக்கு 3 அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியுள்ளது.

மேலும் மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் உள்ள மாவட்ட வைத்திய அதிகாரிகளின் பாவனைக்கென மூன்று மோட்டார் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன. 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் போர்ச்சூழலினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சுகாதார மருத்துவ சேவைகள் மேம்பாடடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றது. மாகாண தலைமைச் செயலாளர் எஸ்.ரங்கராஜா இந்த நிகழ்விற்குத் தலைமை தாங்கினார்.

ஜப்பானிய தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஹிரோஷி கபரே 'யுனிசெவ்' நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரெட்சாப்மன், மத்திய சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் நிஹால் ஜயதிலக்க, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரட்ணாயக்கா, மாகாண சுகாதார சேவைகள் அமைச்சைச் சேர்ந்த டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வாகனங்கள் அனைத்தும் உடனடியாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

(ம-187)

**நாளை**

பங்குனி 13
வெள்ளிக்கிழமை
(26.03.2004)
திதி: பஞ்சமி
பகல் 10.49 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
சுபநேரம்: 6.14 - 7.44
ராகுகாலம்: 10.44 - 12.14
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

கல்லைக் கடவுளாக்குங்கள். ஆனால், கடவுளைக் கல்லாக்காதீர்கள்.

# திருட்டு மின்சாரம் பெற்றுவந்த 9 வீடுகளின் இணைப்புத் துண்டிப்பு

## வடமராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்25

சட்டபூர்வமாக மின் இணைப்புப் பெற்றிருந்தபோதும் அதற்கு மேலதிகமாகத் திருட்டு மின்சாரம் பெற்ற 9 வீடுகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. மின்மானிகளும் அகற்றப்பட்டன. வடமராட்சியில் கடந்த திங்களன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மின் விநியோகம் தொடர்பாக வீடுவீடாகச் சென்று திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளும் மின்சாரசபைப் பரிசோதகர்களே இந்தத் திருட்டினைக் கண்டுபிடித்தனர்.

மின்மானிகளுடாக வீட்டுக்கு வழங்கப்பட்ட இணைப்புக்குப் புறம்பாக இணைப்புக்களை - மின்மானியின் கணக்கில் வராது இவர்கள் ஏற்படுத்தியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுபோன்று திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற 45 பேர் வரையிலானோரின் மின் இணைப்புகள் இந்த மாதத்தில் மட்டும் துண்டிக்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களின் மின்மானிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. (ம-15)

**பக்தரைக் காத்தருளும் வைத்தியநாதரே!**

வல்வினை போக்கி வளமான வாழ்வருளும்
வண்ணை வைத்தீஸ்வரனே வாலாம்பிகை நாயகரே!
நல்வித்தை தந்தே நம்மை ஆட்கொண்டருளும்
உமை மணவாளனே உலகநாதனே சரணம்!
பல்லோரும் பணிந்தேத்தும் பரம தயாளனே
பக்தரைக் காத்தருளும் வைத்தியநாதரே!
இல்வாழ்வு சிறந்திடவே இரங்கியருள்புரியும்
சந்திர சேகரனே சரணம்! சரணம்!!

- திருமதி உ.பேரானந்தம்

(இன்று வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் 9ஆம் திருவிழா)

# சண்டையா, சமாதானமா என்பதை டில்லியும் வாஷிங்ரனுமே தீர்மானிக்கின்ற நிலை!

## அரசியல் கருத்தரங்கில் புதிய ஜனநாயகக் கட்சி செயலாளர் உரை

வலி. வடக்கு,மார்ச்25

இம்மண்ணில் சமாதானம் வருவதாக இருந்தாலும் சரி, சண்டை வருவதாக இருந்தாலும் சரி, அது சந்திரிகாவின் கையிலோ, ரணில் கையிலோ அன்றி வேறு எவரின் கைகளிலோ இல்லை. இது வாஷிங்ரனில் அமைந்துள்ள வெள்ளை மாளிகையிலும் இந்தியாவில் உள்ள புதுடில்லியிலுமே தங்கியுள்ளது.

- மேற்கண்டவாறு புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் கா.செந்திவேல் குறிப்பிட்டார்.

ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள புதிய ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய போதே செந்திவேல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது-

தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து வரப்போகும் நாள்கள் நெருக்கடியான நாள்களாகவே இருக்கப்போகின்றன. அமெரிக்கா, இந்தியா இரண்டினதும் மிரட்டல்களுக்கு நாம் பயந்துவிடக்கூடாது.

எமது இயக்கங்கள் செய்த அட்டூழியங்கள் மற்றும் அரசினால், படைகளினால் செய்யப்பட்ட பல்வேறு துன்பதுயரங்களையும் தாங்கியவர்கள் எமது மக்கள். தமது சுயநிர்ணயத்தைப் பெற்றக்கொள்வதற்காக இம்மக்களை சரியான வழியில் தொடர்ந்து வழி நடத்தவேண்டும்.

தற்போதைய தமிழத் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவர் அன்று எங்களோடு கதைக்க விரும்பி கொழும்பில் கதைத்தார். அப்போ கூறினார் புலிகளை இல்லாது ஒழிப்பதே தமது நோக்கமும் எண்ணமும் என்று. இன்று நாடாளுமன்றக் கதிரைக்காகவும் பதவிக்காகவும் ஆசைப்பட்டு புலிகளின் புகழைப் பாடிக்கொண்டு திரிகின்றார்.

வெகுஜனப் போராட்டங்களை நாம் இன்று முன்னெடுத்துச்செல்ல வேண்டும் இதற்கு மக்களுக்குத் துணிவைக் கொடுக்கவேண்டும். கடந்த காலத்தில் நாம் தேர்தலில் போட்டியிட்டோம். ஏனென்றால் மக்களுக்கு ஆறுதல் கொடுக்கவேண்டும் என்பதற்காகவே அன்று தேர்தலில் போட்டியிட்டோம்.

நாம் தேர்தலில் போட்டியிட்ட போது, பல துப்பாக்கிகளுக்கு மத்தியிலும் உயிரைக் கொண்டு செல்லக்கூடிய சூழ்நிலையிலுமே தேர்தலில் போட்டியிட்டோம். அன்று ஈ.பி.டி.பியினர் இராணுவம் மற்றும் இனம்தெரியாதவர்களின் துப்பாக்கிகளுக்கு மத்தியிலேயே தேர்தலில் நாம் நின்றோம்.

இன்றைய தேர்தல் அர்த்தமற்றதாகும். ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வரவேண்டிய தேர்தல் ஆனால், இன்று நான்கு வருடத்தில் மூன்று தேர்தல்கள் வந்துள்ளன. இத் தேர்தல்கள் யாருடைய பணத்தில் நடத்தப் படுகின்றன. இதனையிட்டு மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும்.

**ஆதரவும் இல்லை எதிர்ப்பும் இல்லை**

நாம் இத்தேர்தலில் எந்தவொரு கட்சியையும் எதிர்க்கவும் இல்லை. இதே நேரம் ஆதரிக்கவும் இல்லை.

கடந்த காலத்தில் இடம்பெற்ற தேர்தலின் போது கணிசமான அளவு மக்கள் எமக்கு ஆதரவு தந்து வாக்களித்துள்ளனர். நீண்ட காலமாக நாம் மக்களுடன் மக்களாக நின்றுபோராடி இழப்புக்களுக்கு மத்தியிலும் வாழ்ந்துள்ளோம்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் மழுங்கடிக்கப்படக்கூடாது என்பதில் அக்கறையாக இருக்கின்றோம். இப்பேராட்டத்தை மழுங்கடிக்க, அமெரிக்காவும், இந்தியாவும் தமது நலனுக்காக இதனை அழிப்பதற்கு முனைந்து நிற்கின்றன. இதன் ஒரு கட்டமே இன்று மட்டக்களப்பில் இடம்பெற்ற சம்பவமாகும்.

-இவ்வாறு செந்திவேல் தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் க.தேவராஜன் உரையாற்றும் போது கூறியதாவது:-

இன்று இடம்பெறுவது கொள்கைக்கான தேர்தல் அல்ல. கொள்ளைக்கான தேர்தலே ஆகும். இன்றைய தேர்தல் முறையின் கீழ் ஒருவர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட வேண்டுமாக இருந்தால் சுமார் ஒரு கோடி ரூபா வரை செலவு செய்ய வேண்டும்.

இன்று சர்வதேசத்தின் கணிப்பீட்டுக்கான தேர்தல் என்று கூறப்படுகின்றது.

ஆனால், சர்வதேசம் யுத்தம் காரணமாக எமது காலடியில் வந்துவிட்டது. யுத்தத்தைக் கொண்டு இந்தியா பல்வேறு ஒப்பந்தங்கள் மூலம் முழுமையாக எம்முள் புகுந்துவிட்டது.

பலாலி, விமானத்தளம், திருமலை எரிபொருள் குதம், கடல் பாதுகாப்பு என்று கூறி இலங்கை இன்று இந்தியாவின் ஒரு மாநிலமாகவே காணப்படுகின்றது. எமது போராட்டம் காரணமாக இவைகளுக்கு எதிராக இன்று குரல்கொடுக்க யாரும் இல்லை.

பொது மக்களைப் பொறுத்த வரையில் அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டார்கள். இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கூட்டங்களைப் பார்த்தால் சனம் இல்லாத நிலையே காணப்படுகின்றது. முன்னர் தேர்தல் கூட்டங்களை எக்கட்சியினர் நடத்தினாலும் கணிசமான அளவு சனத்தைக காண முடியும்.

அரசியல் கூட்டங்களுக்கு கச்சேரிகள், நாடகங்கள் வைத்து சனத்தை அழைக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இவை முடிந்ததும் சனங்கள் சென்று விடுகின்றார்கள். அரசியலைக் கேட்க சனங்கள் தயாராக இல்லை என்ற நிலைமையே காணப்படுகின்றது. - என்றார்.

(ஐ-86)

## ச.நிலையங்களுக்கான மூலதன நன்கொடை நிதி

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2003 ஆம் ஆண்டுக்கான மூலதன நன்கொடை நிதி மாநகரசபையினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

சனசமூக நிலையங்களின் தரத்திற்கேற்ப இந்நிதி வழங்கப்படுகின்றது. தரம்-"அ" இற்கு ஆயிரத்து 600 ரூபாவும், தரம்-"ஆ" இற்கு ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிதியினை இதுவரையும் பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்கள் உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-6-ரி)

## சூழல் பாதுகாப்புக் குழு அங்குரார்ப்பணம்

கோப்பாய்,மார்ச்25

வலி. கிழக்குப் பிரதேசச் செயலர் பிரிவிற்கான சூழல் பாதுகாப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கோப்பாய் உதவிப் பிரதேசச் செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-72)

## மீசாலை கமலாம்பிகை வித்தியில் தளபாடங்கள் இன்றி மாணவர் சிரமம்

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் போதிய அளவு தளபாடங்கள் இல்லாததால் மாணவர்கள் தரையில் அமர்ந்து கல்வி கற்பதைக் காணமுடிகிறது.

இந்த வித்தியாலயத்தில் 70இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்வி கற்கின்ற போதிலும் அங்கு குறைந்த அளவு தளபாடங்களே உள்ளன.

இதேவேளை-

இயற்றாலை அரச தமிழ்க் கலவன் பாடசாலையிலும் போதிய தளபாடங்கள் இல்லாததால் மாணவர்கள் தரையில் அமர்ந்து கல்வி கற்கின்றனர் என்றும் கல்வித்திணைக்களத்திடம் தொடர்புகொண்டும் தளபாடங்கள் வழங்கப்படவில்லை என்றும் அப்பகுதிப் பெற்றோர் தெரிவித்தனர். (ம-117)



தென்மராட்சி மேற்கு பலநோக்குக் 'கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் புடைவை விற்பனை நிலையத்தினை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் நாடாவெட்டித் திறந்துவைப்பதைப்படத்தில் காணலாம். சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம், பொது முகாமையாளர் சி.தேவகுமார். கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ.புஷ்பன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: 'தென்மராட்சிச் செய்தியாளர்)*

## சமாதானம் வேண்டி பளையிலிருந்து வடமராட்சிக்கு சிலுவைப் பவனி

பளைப் பிரதேச கத்தோலிக்கப் பங்கைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் நாட்டில் நிரந்தர சமாதானம் வேண்டி பளை புனித மரியன்னை தேவாலயத்திலிருந்து வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் தேவாலயம் வரை சிலுவைப் பவனி ஒன்றை நடத்த உள்ளனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை இந்த சிலுவைப் பவனி இடம்பெறும். இளைஞர்கள் சிலுவையைச் சுமந்தபடி சைக்கிளில் பயணிப்பர்.

பங்குத் தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் அடிகள் தலைமையில் இளைஞர், யுவதிகள் இந்த சைக்கிள் யாத்திரையில் கலந்துகொள்ளவுளளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் பங்கைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் சிலுவை சுமந்தவண்ணம் புலோப்பளையிலிருந்து தம்பகாமம் வரை பாதயாத்திரை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## மட்டுவில் தெற்குப்பகுதிக்கு மின்சாரம்

தென்மராட்சி,மார்ச்24

மட்டுவில் தெற்குப்பகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த 22ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்விநியோகத்திற்கான மின்மாற்றி மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

## உசன் பகுதிக்கு விரைவில் 24மணிநேர மின் விநியோகம்

தென்மராட்சி,மார்ச்25

உசன் பகுதிக்கான 24மணிநேர மின் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மிருசுவில் கண்டி வீதியிலிருந்து உசன் கந்தசாமி கோவில் வரை உயர் அழுத்த மின்கம்பங்கள் போடப்பட்டு கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளன.

விரைவில் உசன் கந்தசாமி கோவில் அருகே மின்மாற்றி பொருத்தப்பட்ட பின்னர் உசன் பகுதிக்கான 24மணி நேர மின் விநியோகம் ஆரம்பிக்கப் படுமெனத் தெரிவிககப்பட்டது.

அப்பகுதிக்கு தற்போது ஜெனரேற்றர் மூலம் இரவு வேளையில் மின் விநியோகம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## 'டயலொக்' தொலைபேசி சேவையை இங்கு விஸ்தரிக்க தொடர்பு கோபுரங்கள் அமைப்பு

கொடிகாமம்,மார்ச்25

'டயலொக்' நிறுவனம் யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும் தனது தொலைபேசிச் சேவையை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கான தொலைத்தொடர்பு கோபுரங்கள் அடுத்தமாத நடுப்பகுதியில் சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய், உடுப்பிட்டி ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக 'டயலொக்' நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கோபுரங்களில் பொருத்துவதற்கான அன்ரனாக்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன எனவும் கோபுரங்கள் அமைக்கப்பட்டதும் அன்ரனாக்கள் உடனடியாகப் பொருத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் 'டயலொக் நிறுவனத்தின் தொலைபேசி சேவையைச் சீராகப் பெறமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

'டயலொக்' நிறுவனத்தின் கைத் தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ளதையடுத்தே இத்தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே யாழ்ப்பாணம், உசன், மாலிசந்தி, சங்கானை ஆகிய இடங்களில் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8-74)

## ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச்25

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் 'உரிய சமத்துவ நெறி இந்து தர்மம்' என்ற தலைப்பில் சிவஸ்ரீ ப.சிவலோகநாத தேசிகர் சொற்பொழிவாற்றுவார். (ம)

## மல்லாகம் பொதுச் சந்தையில் ரூ.30லட்சம் செலவில் கட்டடத்தொகுதி

தெல்லிப்பழை,மார்ச்25

மல்லாகம் பொதுச்சந்தையில் 30 லட்சம் ரூபா செலவில் நவீன அடுக்குமாடிக் கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாக வலி. வடக்குப் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

மல்லாகத்தில் மக்கள் சந்தைக்கான கட்டடத் தொகுதியொன்று ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. எனினும் வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கு வாய்ப்பான முறையில் அது இல்லை.

இதனால் இக்கட்டடத் தொகுதி வர்த்தகர்கள் எவராலும் பாவிக்கப் படாமல் மூடிய நிலையிலேயே உள்ளது. இச்சந்தைக் கட்டடத் தொகுதி இயங்காமையினால் மல்லாகம், தெல்லிப்பழை, ஏழாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுன்னாகம் சந்தைக்கு நீண்டதூரம் சென்றே தமக்குத் தேவையான பொருள்களை வாங்க வேண்டியுள்ளது.

இப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும், மல்லாகம் நகரப் பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்குடனும் மல்லாகம் சந்தைக்கு முன்பாக விரைவில் இந்த நவீன கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி வலி.வடக்குப் பிரதேச சபைக்குக் கிடைத்துள்ளதாகவும் கட்டடத் தொகுதி அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் வலி.வடக்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார். (ம-8-150)

## தவக்காலச் சிந்தனை

### மனித வாழ்வு ஒரு மறைபொருள்

**முப்பதாம் நாள்**

ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை. *(லூக்.1:37)*

கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும் என்று சொல்வார்கள். ஆனால், துன்பம் துயரம் வாழ்வில் அலை மோதும் போது இறைவன் இருக்கின்றாரா? இறைவனுக்குக் கண் இல்லையா? எனக் கேள்விக்கு மேல் கேள்விகள் எழுப்புவது உண்டு. அவல வேளைகளில் அங்கலாய்ப்பது உண்டு. யாரை நம்புவது என்று குழம்பிப் போய்விடுவது உண்டு. ஆறு அறிவு படைத்த மனிதன் வாழ்வின் நிகழ்வுகள் யாவும் தன் சிந்தனைக்குள் அடங்கிவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் உண்டு. மனிதன் ஒரு மறைபொருள். மனித வாழ்வு ஒரு மறைபொருள். எல்லாவற்றையும் புரிந்துகொள்வது என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு விடயமாகின்றது. ஆழம் அறியாமல் காலை விடாதே என்பது ஒரு முதுமொழி. இறை மனித உறவில் இறைவனை நம்பி இறைவனில் தங்கி நிச்சயமற்ற எதிர்காலத்தில் குதிப்பதுதான் நம்பிக்கையாகும். இறைவனால் எல்லாம் ஆகும் என்று முழுமையாக நம்பி ஒருவன் இறை திட்டத்திற்கு தன்னைக் கையளிக்கும் பொழுது வாழக்கைப் பயணம் ஒரு யாத்திரையாகின்றது. வாழ்வு புனிதமடைகிறது. உள்ளம் அமைதியில் திளைக்கின்றது.

*சுவாமி ஜீவா போல் அ.ம.தி.*

# வாக்களிக்காது ஒதுங்க நினைக்கும் மக்கள் மட்டக்களப்பில் தேர்தல் ஆரவாரம் இல்லை

நாடெங்கும் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்மக்கள் தேர்தலில் வாக்களிப்பதா இல்லையா என்ற இரண்டும் கெட்டான் நிலையிலேயே உள்ளனர்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட போது மக்களுக்கிருந்த நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் கடந்த 3ஆம் திகதிக்கு பின் சிதைந்து போய்விட்டன. விடுதலைப் புலிகளின் தலைமை மீது கடந்த 3ஆம் திகதி குற்றச்சாட்டுக்களை சுமத்தி கருணா அறிக்கை வெளியிட்டிருந்தார்.

ஆனால் தனியாக பிரிந்து போவது பற்றி ஏற்கனவே திட்டமிட்டு பல நடவடிக்கைகளையும் எடுத்திருந்தார் என்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

கடந்த மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியினருடன் கருணா நேரடியாக தொடர்பு கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிக்காவின் நெருங்கிய சகாவும், மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ரட்னா கமகே என்பவரை கருணாவின் பிரத்தியேக செயலாளரான வரதன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்து இந்தத் தொடர்புகளும் பேச்சுக்களும் வலுப்பெற்றன. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கருணா குற்றம்சாட்டி அறிக்கை வெளியிடுவதற்கு முன்பே ஜனாதிபதி சந்திரிக்காவின் பிரதிநிதியான ரட்ணா கமகே மூன்று தடவைகளும், ரணில் விக்கிரமசிங்காவின் பிரதிநிதியான அலிசாகிர் மௌலானா இரு தடவைகளும் கருணாவை சந்தித்து பேசியுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிப்பார்கள் என கருணா தரப்பிலிருந்து ஜனாதிபதிக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தெரிவாகும் ராஜன் சத்தியமூர்த்திக்கு அமைச்சர் பதவியும் கிங்ஸ்லி இராசநாயகத்திற்கும் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுபவருக்கும் பிரதியமைச்சர் பதவிகளும் வழங்கப்பட வேண்டும் என கருணா அணியினர் விடுத்த வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

கருணா தன்னைச் சந்திப்பதற்கு பல தடவைகள் முயற்சி செய்ததாகவும் அதற்கு தான் இணங்கவில்லை என்றும் ஜனாதிபதி சந்திரிக்கா அண்மையில் தெரிவித்திருந்தார். அண்மையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்கள் கரடியனாற்றில் உள்ள தேனகம் விருந்தினர் விடுதிக்கு அழைக்கப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் கருணா அணியினர் வேட்பாளர்களுக்கு விதித்த நிபந்தனைகள் சில வேட்பாளர்களை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்கள் இம்மாவட்டங்களின் அபிவிருத்தி பற்றியே தேர்தல் பிரசாரங்களின் போது மக்களுடன் பேசவேண்டும்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றியோ தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைகள் பற்றியோ பேசக் கூடாது என கூறப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே, நிரந்தரத் தீர்வு எட்டப்படும்வரை வடக்கு - கிழக்கு இணைந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரம் விடுதலைப் புலிகளிடம் வழங்கப்பட வேண்டும் என்ற விடயங்களை வேட்பாளர்கள் பேசக்கூடாது, இக்கொள்கைகளுக்கு உடன்பட்டு போகக்கூடாது என வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்களில் தலைமை வேட்பாளர்களான ஜோசப் பரராஜசிங்கம், அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் மட்டுமே தமிழ் தேசியக்கூட்டமைப்பை சேர்ந்தவர்கள். ஏனையவர்கள் கருணாவினால் நியமிக்கப்பட்டவர்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜோசப்பரராஜசிங்கத்தை தவிர ஏனைய வேட்பாளர்களான ராஜன் சதியமூர்த்தி, த.கனகசபை, கிங்ஸ்லி இராசநாயகம், அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி, தங்கேஸ்வரி, அரசரத்தினம் ஆகியோர் மாவட்ட அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்வதற்கு சம்மதித்ததுடன் கருணாவின் தற்போதைய நிலைப்பாட்டை பூரணமாக ஏற்றுக்கொண்டு செயற்படுவதென உறுதியளித்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் , என்ற விடயத்திலிருந்து தன்னால் விலகமுடியாது என்றும் பிரதேசவாதம் பேசி வாக்கு கேட்க முடியாது என்றும் ஜோசப் பரராஜசிங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதையும் வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பதையும் உலகிற்கு காட்டுவதற்குமான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக இத்தேர்தலை தமிழ் மக்கள் பயன்படுத்த வேண்டும் என தமிழ்தேசியக் கூட்டமைப்பும் விடுதலைப்புலிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால், மட்டக்களப்பு, அம்பாறை வேட்பாளர்கள் இந்த கொள்கைகளுக்கு எதிராக செயற்பட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சில வேட்பாளர்கள் அதற்கு இசைந்து போயுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கென வாக்களித்தாலும் அக்கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் வேட்

**செய்திக் கட்டுரை**

**இரா.துரைரத்தினம்**
*மட்டக்களப்புச் செய்தியாளர்*

பாளர்களே தெரிவு செய்யப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

தலைமை வேட்பாளரான ஜோசப் பரராஜசிங்கம் மட்டுமே கட்சிக்கொள்கையோடு நிற்க கூடியவர். ஏனையவர்கள் கருணா அணியின் திசையில் அடிபட்டு போகக்கூடியவர்களே.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தால் ஐந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுவார்கள்.

ஏனைய தமிழ் கட்சிகளான புளொட், ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகளுக்கு வாக்களிப்பதற்கு தமிழ் மக்களின் மனச்சாட்சி இடம்கொடுக்காது.

இதனால் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியிருப்பது என்ற முடிவையே எடுத்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராகவோ, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதற்கு எதிராகவோ பிரசாரம் செய்வதை தமது கட்சி ஏற்றுக்கொள்ளாது என்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்குவதென்ற முடிவையும் தமது கட்சி ஏற்றுக்கொள்ள மாட்டாது என ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் இந்த முடிவை ஏற்க மறுத்த கருணா அணியினர் தாங்கள் குறிப்பிடும் வட்டத்திற்குள் மட்டும் நின்று தேர்தல் பிரசாரத்தை செய்ய முடிந்தால் செய்யுங்கள், இல்லையேல் தேர்தல் பிரசாரங்களிலிருந்து ஒதுங்கி மட்டக்களப்பை விட்டு வெளியேறிவிடுங்கள் என தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் தலைமைக்கு ஏற்பட்ட நெருக்கடி போலவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமைக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் முடிவடைந்த பின் இந்த நெருக்கடி மேலும் அதிகரிக்கலாம். இந்த தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பலம் வாய்ந்த சக்தியாக இருக்கும் என உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கணிக்கப்பட்டது.

ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் தேசியக்கூட்டமைப்பே திகழப்போகிறது என பலராலும் நம்பப்பட்டது. இதைக்கண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சில சக்திகள் அஞ்சின.

இதை எப்படியாவது உடைத்து விட வேண்டும் என கங்கணம் கட்டின. தமிழர் விடுதலைக்கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்தி ஆனந்தசங்கரியை யாழ். மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிட வைத்தனர். ஆனால், அது வெற்றியளிக்க போவதில்லை என உணர்ந்துகொண்டவர்கள் கருணாவை தங்கள்வலைக்குள் போட்டுக்கொண்டனர்.

இதனாலேயே கிழக்கில் இன்று நெருக்கடிகள் தோன்றியிருக்கின்றன என்பதே மட்டக்களப்பு பிரதேச மக்கள் பலரும் கருதுகின்றனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு சார்பில் வெற்றிபெறப்போகிறவர்களில் ஜோசப் பரராஜசிங்கம் மட்டுமே கட்சிக்கொள்கையோடு நிற்க கூடும், ஏனையவர்கள் கருணா அணியைச் சேர்ந்தவர்களே.

தமிழ் தேசியம், வடக்குகிழக்கு தமிழர் தாயகம், விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற கொள்கைகளுக்காகவே மட்டக்களப்பு தமிழ் மக்கள் வாக்களிக்க போகின்றனர். ஆனால், இதன் மூலம் தெரிவு செய்யப்பட இருப்பவர்கள் இக்கொள்கைகளுக்கு எதிராக இன்று செயற்படும் கருணா அணியினர்.

அமைச்சர் பதவிகளுக்காகவும் அற்பசொற்ப சலுகைகளுக்காகவும் இவர்கள் கொள்கைகளை மறந்து

தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் ஜே.வி.பியின் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியினருடன் இணைந்து கொள்வார்களாக இருந்தால் மட்டக்களப்பு மீது மற்றொரு களங்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

மட்டக்களப்பு வரலாற்றில் இவ்வாறு பல களங்கங்கள் பதியப்பட்டிருக்கிறது. தமிழீழ கோரிக்கையை முன்வைத்து 1977இல் மட்டக்களப்பு தொகுதியிலும் பொத்துவில் தொகுதியிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் தெரிவு செய்யப்பட்ட இராசதுரை, கனகரத்தினம் போன்றவர்கள் தமது கட்சி கொள்கைகளையும் இனத்தையும் மறந்துவிட்டு

அமைச்சர் பதவிகளுக்காக தமிழினத்தை காட்டிக்கொடுத்த வரலாறு மீண்டும் இன்று புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

## சாயி சிந்தனை



இது மைக்... இதைச் சுட்டிக்காட்டி மைக் என்று உணர்ந்த பிறகு மீண்டும் விரலை நீட்டி இதுதான் மைக் என்று சொல்ல வேண்டிய தேவையில்லை. அதைப்போலவே இது மலர், இது கமரா என்றெல்லாம் உணர்த்திய பிறகு நீ மீண்டும் மீண்டும் அதைச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. அதேபோலத்தான் தெய்வம் என்று விக்கிரகத்தைக் காட்டி உணர்த்திய பிறகு அதன் மூலம் தெய்வத்தை அறிந்த பிறகு உருவம் என்பது தேவையில்லாமல் போகின்றது. இது சந்திரன் என்று காட்டுகின்றோம். ஒரு மரக்கிளைக்கு மேலே ஆகாயத்தில் இருக்கிறது சந்திரன் எனச் சுட்டிக்காட்டுகின்றோம். சந்திரன் இருப்பதை உணர்ந்த பிறகு அப்படிக் குறிப்பால் உணர்த்த வேண்டிய அவசியமேயில்லை. அதேபோல் எல்லாமே தெய்வ வடிவம் என்ற ஞானத்தெளிவு ஏற்பட்டவுடன் இவ்வாறு வடிவங்கள் தேவை இல்லை. திருமணம் ஆகவேண்டிய பெண்ணிடம் போய் அம்மா உனக்கு வரவிருக்கிற கணவன் எப்படியிருக்கின்றான் என வினவினால் அவளால் எப்படிச் சொல்ல முடியும்? யார் அந்தக் கணவன்? தெரியாது. தெரியாத போது, இப்படியிருப்பார், அப்படியிருப்பார் என எப்படி வர்ணிக்க முடியும்? திருமணத்துக்குப் பிறகுதான் கணவனின் உருவமும் பெயரும் விவரிக்கத் தகுந்த வகையில் புலனாகிறது. அதேபோல் இறைவனைப் பூஜித்து, ஆதாரித்து எல்லாம் உன்னுடைதே என அர்ப்பணம் செய்த இறைவனைப் பற்றி இப்படி அப்படிச் சொல்ல முடியும். அதனால் விக்கிரக ஆராதனை மேல் அவநம்பிக்கையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். ஏனெனில் அணுவிற்குக்கூட ஒருவடிவம் உண்டு. உருவமற்றது இவ்வுலகில் எதுவும் இல்லை.

- சனாதனசாரதி

## கல்விச்சாலைக் காட்சிகள்



ஊரெழு கணேச வித்தியாசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்திராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் உதவிப் பிரதேச செயலர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி ப.ஏரம்பமூர்த்தி, அதிபர் இ.குலசிங்கம் மற்றும் விருந்தினர்களும் காணப்படுகின்றனர். (ஐ-72)



கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய இல்லமெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தெருக்கள் திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திருமதி க.இராமநாதன், சிறப்பு விருந்தினர்களான ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் வே.கைலைநாதன், பழைய மாணவர் இ.ரகுபரன் ஆகியோர் 'பாண்ட்' வாத்திய இசையுடன் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம். (ஐ-8)



துணவி அ.மி.த.க.பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராஜா போட்டியை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் கா.சிவநேசன் சிறப்புவிருந்தினர் நா.ஜெயரஞ்சன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ)




கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட மாடிக் கட்டடம் அண்மையில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொண்டு புதிய கட்டடத் தொகுதியை மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.செந்தில்குமரன் காணப்படுகிறார். (ஐ-17)

# முதலாம் ஆண்டு நினைவு

மலர்வு 30 - 09 - 1929



உதிர்வு 07 - 04 - 2003

## அமரர் மாணிக்கம் தியாகராசா

திதி: 25-03-2004

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
எம்மனதில் என்றும் நிலையாய் இருந்திடுவாய்.

தூதாவளை; கரணவாய். (29990) (26-13-12)- குடும்பத்தினர்.

# ஆம் ஆண்டு இதய அஞ்சலி

தோற்றம் 14-10-1959



மறைவு 25-03-2002

## திருமதி குருநாதன் அலெக்ஸ்சாந்திரியா

அம்மா விண்ணுலகம் சென்று நீங்கள்!
ஆண்டுகள் இரண்டாகிலும்
உங்கள் நினைவுகள் என்றும் உயிராய்
இருக்கின்றதம்மா!
யார் வந்து ஆறுதல் தந்தும் உமக்கு
நிகர் யார் அம்மா?
நித்தமும் உம் நினைவால் நெஞ்சுருகி
வாடுகின்றோம் அம்மா நாம்!

30/2, நீக்கலஸ் லேன்,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

அன்புக் கணவர்,
பிள்ளைகள்.

(29977) (26-12-13)

## நல்லைக் குருமணியின் குருபூஜை ஆராதனை

யாழ்ப்பாணம்,மார்ச்25

நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 23ஆவது ஆண்டு குருபூஜை, ஆராதனை விழா எதிர்வரும் 29ஆம் திகதி காலை 10 மணிக்கு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(ம-ரி)

## குரங்கின் சேஷ்டையால் மோட்டார் சைக்கிள் விபத்து

தென்மராட்சி,மார்ச்25

மரத்தில் அமர்ந்திருந்த குரங்கு வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது பாய்ந்ததில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர் நிலை குலைந்து மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இச்சம்பவம் அண்மையில் பளை, பெரிய பளையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே காயமடைந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## பற்சுகாதாரம் தொடர்பான பரிசோதனை

வலிகாமம்,தெற்கு.மார்ச்25

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான பற்சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகள் சுகாதாரக்கல்விப் பிரிவு உத்தியோகத்தர்களின் உதவியுடன் சுன்னாகம் நகர பொதுச்சுகாதார பரிசோதகர் கே.பத்மகுமாரினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு பற்சூத்தை சம்பந்தமான பரிசோத னைகள் நடைபெறுவதுடன் சிறுவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை என்பனவும் இலவசமாக வழங்கப் படவுள்ளன.

அத்துடன், பற்சுகாதாரம் தொடர்பான வீடியோ படக்காட்சியும் காண்பிக கப்பட உள்ளது. (ம-152)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கோள்ளலாம்.


Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-220

யாழ்.மாவட்ட
ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(சி-33907) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (26-12-13)


# முதலாம் வருட இதய அஞ்சலி

பிறப்பு 30 - 07 - 1932



இறப்பு 07 - 04 - 2003

## அமரர் வல்லிபுரம் சுப்பிரமணியம் கனகரட்ணம்

(முன்னாள் உதவி அரச அதிபர்)

திதி: 25-03-2004

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை உங்கள் நினைவு!
ஈண்டு உங்களை எந்நேரமும்
இதயத்தில் வைத்துப் பூஜிக்கிறோம்
மீண்டு ஒருமுறை வரமாட்டீரோ என
ஏங்கி நாளுந் தவிக்கின்றோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

தகவல்: V.S.குலசிங்கம்,
சகோதரன்,
73/1,கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(29950) (26-12-13)


# எக்காளத் தொனி

## மாபெரும் எழுப்புதல் கூட்டங்கள்

நோயினால் வருந்துபவர்களே!
பில்லி சூனியக்கட்டில் அகப்பட்டுள்ளவர்களே!
சமாதானம் இன்றி வாடுபவர்களே!

வெற்றி நிச்சயம்

விடுதலை சத்தியம்

குடும்பமாக வாருங்கள்!
இலவசமாக
விடுதலை பெறுவீர்கள்!!

காலம்:
2004 மார்ச் 24 முதல் மார்ச் 28 வரை

நேரம்:
தினமும் மாலை 4.30 முதல்
8.00மணிவரை

இடம்:
திறந்தவெளி அரங்கு, யாழ்ப்பாணம்
(யாழ். மத்திய நூலகத்துக்கு அருகில்).



பாஸ்டர் மேவின் குணசெல்வம்
ஸ்தாபகர் - நிர்வாகி
எக்காளத் தொனி - இலங்கை.



பாஸ்டர் இயன் கிறிஸ்ரென்சன்
லண்டன்,
இங்கிலாந்து

தொடர்புகளுக்கு:
எக்காளத் தொனி 021-2223632
அனுமதி இலவசம்!

யாவரும் வாருங்கள்! தெய்வ அருளால் விடுதலை பெறுவீர்கள்!

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2004

### தகுதி காண் மட்டம்

குறித்த ஒரு தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் பெறுமானமுள்ள வாக்குகளின் எண்ணிக்கையில் 5%இற்குக் குறைவாகப பெற்றவர்கள் மாவட்ட ஆசனப் பங்கீட்டுக் கணிப்பிலிருந்து விலக்கப்படுவார்கள். வாக்களிப்பு வீதம் உயரும்போது அதற்கேற்ப தகுதிகாண் மட்டமும் உயரும். இந்நிலையில், சிறு கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகவுள்ளன. எனினும், தேசிய மட்டத்தில் வெட்டுப் புள்ளி இல்லாத நிலையில் எல்லா வாக்குகளும் கணக்கில் எடுக்கப்படும். 2000ஆம் ஆண்டுத் தேர்தலில் சிஹல உறுமயக் கட்சி எல்லா மாவட்டங்களிலும் வெட்டுப்புள்ளியைத் தாண்டவில்லை. என்றாலும் தேசியப் பட்டியலில் ஓர் ஆசனத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

### போனஸ் ஆசனம்

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கையில் முதலாவது ஆசனம் அந்தந்த மாவட்டங்களில் கூடுதலான வாக்கைப் பெறும் கட்சிக்கு போனஸாகக் கொடுக்கப்படும். இதனையே போனஸ் ஆசனம் என்பர். வாக்குகள் அடிப்படையில் கட்சிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும்போது, போனஸ் ஆசனத்தைத் தவிர்த்தே கணிப்புகள் மேற்கொள்ளப்படும். இதனால் கூடுதலான வாக்குகளைப் பெறும் கட்சி போனஸ் ஆசனத்தை மாத்திரமல்லாமல்கடைசி ஆசனத்தையும் குறைந்தளவு வாக்குகளுடன் பெறும் வாய்ப்புண்டு. இதனாலேயே கட்சிகள் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதற்கு விரும்புகின்றன. உதாரணமாக,. 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 17 போனஸ் ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3 போனஸ் ஆசனங்களையும் மக்கள் முன்னணியும் முஸ்லிம் காங்கிரஸும் தலா ஒவ்வொரு போனஸ் ஆசனத்தையும் பெற்றன. கடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பல கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்ததற்குக் காரணம் மக்கள் நம்பிக்கையைப் பெறும் அரசியல் வழிமுறையுடன் போனஸ் ஆசனங்களையும் மாவட்ட இறுதி ஆசனங்களையும் தேசியப் பட்டியலில் கூடுதலான ஆசனங்களையும் பெறும் நோக்கத்துடனேயாகும்.

2004 தேர்தலில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து அரசியற் கூட்டு அமைத்ததன பிரதான காரணங்களில் ஒன்று கூடுதலான போனஸ் ஆசனங்களையும் மாவட்ட இறுதி ஆசனங்களையும் தேசியப் பட்டியலில் கூடுதலான ஆசனங்களையும் பெறலாம் என்பதாகும்.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி. கட்சிகளும் பெற்ற வாக்குகளைக் கூட்டிப் போனஸ் ஆசனங்களைக் கணிப்போமானால் கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், இரத்தினபுரி, மொனறாகல ஆகிய பத்து மாவட்டங்களில் பத்து போனஸ் ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருந்திருககும். ஐக்கிய தேசிய முன்னணி இச்சூழ்நிலையில் கொழும்பு, கண்டி, மாத்தளை, நுவரெலியா, திருகோணமலை, புத்தளம், பதுளை, கேகாலை ஆகிய எட்டு மாவட்டங்களில் மாத்திரம்தான் எட்டு போனஸ ஆசனங்களைப் பெற்றிருக்கமுடியும். தமிழ்த் தேசிய முன்னணி யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களில் மூன்று போனஸ் ஆசனங்களைப் பெற்றது. முஸ்லிம் காங்கிரஸ் திகாமடுல்ல மாவட்டத்தில் மாத்திரம் ஒரு போனஸ் ஆசனத்தைப் பெற்றது.

இதுபோன்று கட்சிகள் கூட்டுச் சேர்வதால் மாவட்டத்துக் கடைசி ஆசனங்களையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். 2001 தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத் தேர்தல் முடிவு மூலம் கட்சிகள் கூட்டுச் சேர்வதன் பலன் விளக்கப்படுகிறது.

| கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,12,620 |
| மக்கள் முன்னணி | 1,05,175 |
| மக்கள் விடுதலை முன்னணி | 59,693 |
| மொத்த வாக்குகள் | 2,77,488 |

இங்கு மொத்தம் ஏழு ஆசனங்கள். போனஸ் ஆசனம் போக பெறுமானமுள்ள வாக்குகளை ஆறால் பிரிக்க ஓர் அங்கத்தவர் பெறவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை 46,248 ஆகும். இதன் அடிப்படையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு இரு ஆசனங்கள் கொடுக்கப்பட்டு, 20,174 வாக்குகள் மிகுதியாக உள்ளன. மக்கள் முன்னணிக்கு இரு ஆசனங்கள் கொடுக்கப்பட்டு 12,679 வாக்குகள் மீதியாகவுள்ளன. மக்கள் விடுதலை முன்னணிக்கு ஓர் ஆசனம் கொடுக்கப்பட்டு 13,145 வாக்குகள் மீதியாக உள்ளன. மூன்று கட்சிகளிலும் கூடுதலான எச்ச வாக்குகளை ஐக்கிய தேசிய முன்னணி கொண்டிருந்ததால் அதுவே கடைசி ஆசனத்தைப் பெற்றது. இறுதியில் ஐக்கிய தேசியக் முன்னணி நான்கு ஆசனங்களையும் மக்கள் முன்னணி இரு ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி ஓர் ஆசனத்தையும் பெற்றன. மக்கள் முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டுச் சேர்ந்திருந்தால் தேர்தல் முடிவு வேறு விதமாக வந்திருக்கும். மக்கள் முன்னணியும் மக்கள் விடுதலை முனனணியும் இணைந்து ஐந்து ஆசனங்களையும் ஐக்கிய தேசிய முன்னணி இரு ஆசனங்களையும் பெற்றிருக்கும். இதனடிப்படையில் தான் இவ்விரு கட்சிகளும் தற்போது கூட்டுச்சேர்ந்துள்ளன எனக் கருதலாம்.

### தேசியப் பட்டியல்

மொத்த நாடாளுமன்ற அங்கத்தவர்களுள் 29 அங்கத்தவர்கள் தேசியப் பட்டியல் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். நாடு தழுவிய ரீதியில் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் பெற்ற மொத்த செல்லுபடியான வாக்குகளை 29 ஆல் பிரிக்க ஒரு தேசியப் பட்டியல் அங்கத்தவரின் பெறுமானம் கிட்டும். இது 3.448 வீதமாக அமையும். இவ்வீதத்திற்குரிய வாக்கு எண்ணிக்கை தேர்தலுக்குத் தேர்தல் மாறுபடலாம். ஆனால், அதிகரித்துச் செல்லும் போக்கே காணப்படும். 2001 தேர்தலில் 3,08,823 வாக்குகள் ஓர் அங்கத்தவருக்குரிய பெறுமானமாக இருந்தது. இதற்கேற்ப கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிப்படையில் ஆசனங்கள் பங்கீடு செய்யப்பட்டன. இறுதி 3 அல்லது 4 ஆசனங்கள் முழுமையான தானத்திற்கு இல்லாமல் குறைந்த வாக்குகளின் அடிப்படையில் அளிக்கப்படலாம். உதாரணமாக, முஸ்லிம் காங்கிரஸ் 1,05,246 வாக்குகளுடன் 29ஆவது ஆசனத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதேபோல், 2000 தேர்தலில் மாவட்ட மட்டத்தில் ஓர் ஆசனத்தையும் பெறாமலும் வெட்டுப்புள்ளிக்குக் கீழ் மொத்த வாக்குகளைப் பெற்றிருந்த நிலையிலும் சிஹல உறுமயக் கட்சி ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தைப பெற்றதும் இங்கு கவனிக்கத்தக்கது. இதன் சிறப்பம்சம் யாதெனில், நாடு தழுவிய ரீதியில் சிறிய கட்சிகள் கூடச் சிதறிய தமது வாக்குகளை மொத்தமாகச் சேகரித்து, பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பது ஆகும்.

தேசிய பட்டியல் முறையின் இலட்சியத்தைப் பெரிய கட்சிகள் சிறந்த முறையில் நிறைவேற்றவில்லை எனக் கருத இடமுண்டு. தேர்தலில் பங்குகொள்ள விரும்பாத / முடியாத கல்வியியலாளர்கள், சட்ட நிபுணர்கள், பொருளியலாளர்கள், தொழிலதிபர்கள், கலைஞர்கள் போன்றவர்களைத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து அவர்களின் சேவைகளை நாட்டு நலனிற்குப் பெறவேண்டும் என்பதே. தேசியப் பட்டியல் முறையின் முனைபபான பண்பாகும். பிரதான முன்னணிக் கட்சிகள் இரண்டும் தேசியப் பட்டியலில் பெண்கள் எவரையும் நியமிக்காததும் கவனிக்கத்தக்கது. மேலும் தேசியப் பட்டியலில் நியமனங்களில் ஒரு சிலரை மீளநியமிப்பது, தேர்தலில் தோற்றவரை நியமிப்பதும், தேர்தலில் நின்று நாடாளுமன்றம் சென்றவர்களை நியமிப்பதும், கட்சி அரசியலில் பிரச்சினைக்கு உட்பட்டவர்களை நியமிப்பதும் தேசிய பட்டியல் எண்ணக்கருவிற்கு முற்றிலும் முரணாக உள்ளது. எனவே, தேசியப் பட்டியல் நியமனத்தில் கட்சிகளின் கடந்த காலச் செயற்பாடுகள் பெருமளவுக்கு ஏற்புடையதாக இல்லை. அட்டவணை Vஇல் 2001 தேர்தலில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளும், தேசியப் பட்டியல் ஆசனங்களும் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை V**

**2001 தேர்தலில் கட்சிகளின் மொத்த வாக்குகளும் தேசியப் பட்டியல் ஆசனங்களும்**

| கட்சி | வாக்குகள் | சதவீதம் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 4,086,026 | 45.6213 | 13 |
| மக்கள் கூட்டணி | 3,330,815 | 37.19 | 11 |
| ஜே.வி.பி. | 815,353 | 9.10 | 03 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 348,164 | 3.89 | 01 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 105,346 | 1.18 | 01 |
| ஈ.பி.டி.பி. | 72,783 | 0.81 | |
| சிஹல உறுமய | 50,665 | 0.57 | |
| புதிய இடதுசாரி முன்னணி | 45,901 | 0.51 | |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 16,669 | 0.19 | |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 9,455 | 0.11 | |
| தேசிய ஜனநாயகக் கட்சி | 6,951 | 0.08 | |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | 6,214 | 0.07 | |
| ஐக்கிய லலித் முன்னணி | 3,851 | 0.04 | |
| ஐக்கிய சிங்கள மகாசபை | 2,771 | 0.03 | |
| முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி | 2,644 | 0.03 | |
| சிங்கள மகா சம்மத பூமி புத்திரக் கட்சி | 1,630 | 0.02 | |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 1,624 | 0.02 | |
| மக்கள் விடுதலை முன்னணி | 1,361 | 0.02 | |
| லிபரல் கட்சி | 1,152 | 0.01 | |
| ருகுனு ஜனதாக் கட்சி | 1,089 | 0.01 | |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | 978 | 0.01 | |
| இலங்கை முன்னேற்ற முன்னணி | 854 | 0.01 | |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி | 802 | 0.01 | |
| இலங்கை தேசிய முன்னணி | 719 | 0.01 | |
| சோசலிஷ சமநிலைக் கட்சி | 243 | 0.00 | |
| ஐக்கிய இலங்கை பொதுஜன முன்னணி | 56 | 0.00 | |
| செல்லுபடியானவை | 8,955,869 | 94.77 | |
| நிராகரிக்கப்பட்டவை | 493,944 | 5.23 | |
| அளிக்கப்பட்டவை | 9,449,813 | 76.04 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 12,428,208 | | |

### இடைத்தேர்தல்

தற்போதுள்ள தேர்தல் முறையில் இடைத்தேர்தல் இன்மை ஒரு முக்கிய அம்சமாகும். இடைத் தேர்தலின்மையால் அரசின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கு வாய்ப்பு இல்லாமற்போகிறது என்பது விமர்சகர்களின் கருத்து. தற்போதுள்ள முறைப்படி, ஒரு கட்சியின் நாடாளுமன்ற அங்கத்தவர் ஒருவர் ராஜினாமா செய்யும்போது அல்லது அவருக்கு மரணம் ஏற்படுமிடத்து அவரின் வெற்றிடத்தை, முடிந்த தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அடுத்ததாக உள்ளவர் நிரப்புவார். இம்முறையால் தேர்தலில் தோற்ற ஒருவர் அடுத்த தேர்தலுக்கு முன்பே நாடாளுமன்றம் செல்லக்கூடிய வாய்ப்பு உண்டு. மேலும், கட்சிகளின் செயற்பாடுகள், கனவான்கள் ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படையில் நாடாளுமன்ற ஆசனங்களைச் சுழற்சி முறையில் வழங்கும் நிலையும் காணப்படுகின்றது. நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படாத பட்டியலில் உள்ள ஒருவர் முறையற்ற அழுத்தங்கள் மூலம் நாடாளுமன்றம் செல்லவும் வாய்ப்பு உள்ளது. இவையாவும் இடைத்தேர்தல் இன்மையால் ஏற்படும் நிலைகளாகும்.

### வாக்களிப்புப் பிரிவுகள் (Polling Division)

பழைய தேர்தல் முறைப்படி முன்னர் இருந்த 160 தேர்தல் தொகுதிகளைத் தேர்தல் நிர்வாகச் செயற்பாடுகளுக்காக 160 தேர்தல் வாக்களிப்புப் பிரிவுகளாக வகுத்துள்ளனர். இதனால் மக்கள் மனதில் சில குழப்பங்கள் இருக்கின்றன. தேர்தல் முடிவுகள்கூட முதலில் கட்டம் கட்டமாக வாக்களிப்புப் பிரிவுகள் அடிப்படையிலேயே வானொலி, தொலைக் காட்சிகளில் தரப்படுகின்றன. இப் பிரிவுகள் தேர்தல் வாக்களிப்புப் பிரிவுகளாக இருப்பினும் பழைய தேர்தல் தொகுதியைப் பிரதிபலிப்பதால் உத்தியோகப்பற்றற்ற நிலையில் அரசியல் முக்கியத்துவம் பெறுகிறது.

தேர்தலுக்கு முன்பும், முடிவுகளின் பின்பும், அபேட்சகர்கள், நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இப்பிரிவுகளுடன் தங்களை இணைத்துச் செயற்படுவதைக் காணலாம். மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் சிலர் தங்களைச் சில பிரிவுகளுடன் இணைத்து (பழைய தொகுதி) செயற்படுவதைக் காணலாம். அரசியல் கட்சிகளும் தொகுதி இணைப்பாளர் என இப்பிரிவுகள் அடையிலேயே நியமனம் செய்கின்றன. இதனால் இல்லாமற்போன நாடாளுமன்றத் தொகுதிகள் தொடர்ந்தும் மாற்று முறைகளில் பயன்பாட்டில் இருப்பதால் மக்கள் மனதில் குழப்ப நிலைகள் காணப்படுகின்றன. வாக்களிப்புப் பிரிவுகளை பொதுநிர்வாகப் பிரிவுகளுக்கு ஒத்ததாக மாற்றி இன்று நிலவும் மனக்குழப்பத்தை நிவர்த்திக்கலாம்.

### வடக்கு - கிழக்கில் 2004 தேர்தல்

2004 தேர்தலில் தமிழ் மக்கள் தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மாவட்ட, தேசிய மட்டத்தில் அதிகரிப்பதற்கு வாக்களிப்பில் கூடுதலாகப் பங்குகொள்ளவேண்டும். 2001 தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 31.1 வீதத்தினரும், வன்னித்தேர்தல் மாவட்டத்தில் 46.8 வீதத்தினரும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 67.5 வீதத்தினரும், திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 82.5 வீதததினரும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 79.9 வீதத்தினரும் வாக்களித்திருந்தனர். எனவே, முதல் மூன்று மாவட்டங்களிலீ தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாக இருந்ததைக் காணலாம். திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிப்பு வீதம் உயர்வாக இருப்பினும், தமிழ் மக்களின் வீதம் மற்றைய சமூகங்களின் வாக்களிப்பு வீதத்திலும் குறைவாக இருந்ததை அறிய முடிகிறது. இப்பின்னணியில் இன்று வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் தமக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு இம்முறை வாக்களிப்பில் முழுமையாகப் பங்குகொள்ள வேண்டும். இதனை அடைவதற்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப் படவேண்டும். வசதிகள் செய்து கொடுக்கப்படின் 2,60,000இற்கு மேற்பட்ட தமிழ் வாக்காளர்கள் தேர்தலில் பங்குகொள்ள வாய்ப்புக்கிட்டும். இதன் மூலம் மாவட்ட, தேசிய மட்டங்களில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வழி பிறக்கும்.

### யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் இல.10

இம்மாவட்டம் 6,44,279 வாக்காளர்களையும் ஒன்பது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் உடையது. கடந்த தேர்தலில் கிளிநொச்சி மாவட்டம், வடமராட்சி கிழக்கின் தென் பகுதி மக்கள் வாக்களிப்பில் பங்குகொள்ளவில்லை. மேலும் வாக்களிப்பு வீதமும் தேசிய ரீதியில் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. ஆகவே, மாவட்ட மக்கள் இம்முறை தேர்தலில் முழுமையாகப் பங்குபற்றித், தங்களது மாவட்ட மொத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே ஒரு தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு உதவமுடியும்.

### வன்னித் தேர்தல் மாவட்டம்: இல.11

இம்மாவட்டம் 2,26,604 வாக்காளர்களையும் ஆறு பிரதிநிதித்துவத்தையும் கொண்டது. மாவட்டத்தின் இனக்கூட்டை நோக்கின், தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்தது ஐந்தாக வேனும் இருக்கவேண்டும். ஆனால், இம்மாவட்டத்துக்குள் அடங்கும் மணலாறு நீங்கலான முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா வடக்கு, நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு, மன்னார் மாவட்டத்தில் மாந்தை, மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் வாக்களிக்க முடியாது போய்விட்டது. இதனாலேயே தமிழர் 4 பிரதிநிதித்துவத்தைப் பெற்றனர். இம்முறை தமிழ் மக்களின் முழுமையான வாக்களிப்பு இடம்பெறுமாயின் மாவட்ட மட்டத்தில் ஐந்து பிரதிநிதித்துவத்தைப் பெறுவதுடன் உயர்ந்த வாக்களிப்பு வீதம் தேசியப்பட்டியலில் மேலதிக ஆசனத்தைப் பெறவும் வழி பிறக்கும்.

### திருகோணமலைத் தேர்தல் மாவட்டம்: இல.14

இம்மாவட்டம் 2,24,307 வாக்காளர்களையும் நான்கு பிரதிநிதித்துவத்தையும் கொண்டது. இங்கு மூவின மக்களும் ஏறக்குறைய ஒரே எண்ணிக்கையில் வாழ்ந்தாலும், தமிழ் மக்கள் ஏனைய இரு சமூகத்தவர்களையும்விடச் சற்றுக் கூடிய எண்ணிக்கையினராகவுள்ளனர். கடந்த தேர்தலில் மூதூர் கிழக்கு, ஈச்சிலம்பத்தை உதவி அரச பிரிவு ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பில் பங்குகொள்ளாதபடியாலும், நிராகரிக்கப்பட்ட வாக்குகளில் தமிழர் வாக்குகள் கூடுதலாக இருந்தமையினாலும் பல கட்சிகளுக்கு தமிழர் வாக்குகள் சிதறியதனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதன்மை இடத்தைப் பெறமுடியவில்லை. இதனால் போனஸ் ஆசனம் இழக்கப்பட்டது. தமிழர் பிரதிநிதித்துவமும் ஓர் ஆசனத்தால் குறைந்தது இம்முறை தமிழ் மக்களின் உயர்வான, சரியான வாக்களிப்பு இருப்பின் இழந்த பிரதிநிதித்துவத்தை மீளப்பெற வாய்பு உண்டு. மூதூர் கிழக்கு, ஈச்சிலம்பத்தை மக்கள் வாக்களிப்பில் பங்குகொள்வது உறுதி செய்யப்படவேண்டும்.

### மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டம்: இல.12


இம்மாவட்டம் 3,03,928 வாக்காளர்களையும் ஐந்து பிரதிநிதித்துவத்தையும் கொண்டது. மாவட்டத்தில் இனக்கூட்டை நோக்கின் தமிழர் நாலு பிரதிநிதித்துவத்தையும் முஸ்லிம்கள் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டும். கடந்ததேர்தல்களில் படுவான்கரைப்பகுதி மக்களும் வாகரைப்பிரதேசத்து மக்களும் வாக்களிக்கமுடியாமல் போனதால் 4 பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாது

(11பக்கம் பார்க்க)



பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர். தற்போது அங்கே புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றிவருகின்றார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்கள் குறித்து அவர் பல்வேறு ஆய்வுகளையும் மேற்கொண்டு கருத்தரங்குகளை நடத்தி வருகிறார். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் கட்டாயம் வாக்களிக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ள நிலையில், வாக்களிக்கவேண்டியதன் அவசியத்தையும் அவ்வாறு வாக்களிக்கும்போது வாக்காளர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும் அவர் தனது கருத்தரங்குகளில் விளக்கம் தருகிறார். புவியியல்துறைப் பேராசிரியராக இருந்தபோதும் அரசியல் மற்றும் தேர்தல் குறித்துக் கொண்ட ஆர்வம் காரணமாக அவர் இந்தத் தேர்தல் கருத்தரங்குகளை நடத்தி வருகிறார். கடந்த காலத் தேர்தல் புள்ளி விவரங்களின் அடிப்படையில் இம்முறை தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு வாக்களித்தால் அதிகூடிய ஆசனங்களைப் பெறமுடியும் என்பது பற்றியும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

உதயன் வாசகர்களுக்காக தேர்தல் குறித்து பேராசிரியர் வரைந்த விசேட கட்டுரையின் முதற்பாகம் நேற்று வெளியானது. அதன் இரண்டாவது பாகம் இன்று பிரசுரமாகிறது.

குடாநாட்டில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்திருக்கின்றது. வேட்பாளர்கள் இரவு பகல் பாராது வீதிகளில் இறங்கி மக்களைச் சந்தித்து ஆதரவுகோரி வருகின்றனர். கூட்ட மைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை சோ.சேனாதிராஜாவின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் நகரில் வாகனங்கள் சகிதம் அணியாகச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்ட காட்சி. மற்றொரு வேட்பாளர் சி.சிவமகாராசாவும் காணப்படுகின்றார்.

*படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.*

ஈ.பி.டி.பியின் வேட்பாளர்களும் இப்போது களத்தில் பொதுமக்களைச் சந்தித்து வருகின்றனர். ஈ.பி.டி.பி. வேட்பாளர் கே.வி.குகேந்திரன் நேற்றுமுன்தினம் புறநகர்ப் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம் மேலே பலத்த பாது காப்பின் மத்தியில் குண்டு துளைக்காத ஆடை அணிந்தபடியே ஈ.பி.டி.பி. பிரமுகர்கள் பிரசாரத்தில் ஈடுபடுவ தாகக் கூறப்படுகிறது.

*படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.*

# ராணுவ பலத்துடன் பேசுகின்ற புலிகளுக்கு அரசியல் பலம் கொடுக்கின்ற தேர்தல் இது!

## சாவகச்சேரிக் கூட்டத்தில் ரவிராஜ்



தென்மராட்சி,மார்ச்25

தமிழினத்தின் உரிமைகளுக்காக இராணுவ பலத்துடன் பேச்சு மேசையிலே அமர்ந்திருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியல் பலத்தைக் கொடுக்கின்ற சக்தியாக இந்தத் தேர்தல் மாறவேண்டும்

- இவ்வாறு சாவகச்சேரியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரி கோவில்குடியிருப்பு மகளிர் அபிவிருத்திச் சங்கத் தலைவி செல்வி தயாளினி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ரவிராஜ் மேலும் கூறியதாவது:-

இந்த மண்ணிலே போராட்டம் நடத்தப்பட்டது சலுகைகளை, நிவாரணங்களைப் பெறுவதற்காக அல்ல. எமது உரிமைகளுடன் தன்மானமுள்ள தமிழனாக, யாருக்கும் அடிமை யில்லாமல் இந்த மண்ணிலே வாழவேண்டும் என்பதற்காகத்தான் போராட்டம் நடந்தது.

இந்தப் போராட்டத்திலே பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்திருக்கிறார்கள். இதைவிட ஆயிரக்கணக்கான விடுதலைப் போராளிகள் வீரச்சாவடைந்து இந்த மண்ணிலே தங்கள் உடல்களை விதைத்திருக்கிறார்கள்.

எங்கள் இனத்திற்கு உரிமை வேண்டும். நாங்களும் சிங்கள மக்களும் சமமாக வாழுகின்ற வழிகள் ஏற்படவேண்டும். எங்கள் தாயகத்திலே நாங்கள் நிம்மதியாக வாழ வேண்டும். இதற்கு எமக்கு உரிமை உண்டு. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்த உரிமைப் போராட்டம் நடந்தது.

எங்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. இன்றும் தமிழன் தன்மானத்துடன் வாழ்கிறான். யாருக்கும் அடிபணிந்து வாழமாட்டான் என்ற செய்தியை கடந்த நாடாளுமன்றத்திலே கூடச் சொல்லியிருந்தோம். நாங்கள் இன்றும் தனித்துவமாக அமைச்சுப் பதவிகளை எடுககாமல், மக்களுக்காக எங்கள் இனததுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கள் இனத்தின் விடுதலையை, எங்கள் இனத்தின் விடுதலைப் போராட்டத்தினை எடுத்துக் காட்டுகின்ற தேர்தலாக இத்தேர்தல் அமைய வேண்டும். இன்று தமிழினத்தின் உரிமைகளுக்காக இராணுவ பலத்துடன் பேச்சு மேசையிலே அமர்நதிருக்கிற தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஓர் அரசியல் பலத்தைக் கொடுக்கின்ற சக்தியாக இந்தத் தேர்தல் மாறவேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இந்த மண்ணிலே தமிழ் இனத்தின் ஒற்றுமைக்காக, தமிழ் தேசியத்துக்காக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்காக நாங்கள் வாக்களிக்க வேண்டும். இந்த மண்ணிலே தமிழ் மக்களைக் காட்டிக் கொடுப்பவர்கள் தூக்கி எறியப்பட வேண்டும் - என்றார் ரவிராஜ். (ஐ-117)

## சுவரொட்டி ஒட்டிய இரு பிக்குகள் கைது!

கொழும்பு,மார்ச்25

தேர்தல் சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்டிக்கொண்டிருந்த 'ஹெலஉறுமய' கட்சி ஆதரவாளர்களான இரு பிக்குகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களிடம் குற்றப் பணம் அறவிடப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

வத்தேகமயில் இந்த இரு பிக்குகளும் சுவரொட்டிகளை ஒட்டும் போது கைது செய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர். இவர்கள் இருவரிடமும் தலா ஐந்நூறு ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன் 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாதகால சிறைத்தண்டனையும் விதிககப்பட்டுள்ளது. (ப)




# சுயாதீனமான உரையாடல்கள் மூலம் சுயத்தை நிர்ணயம் செய்திடுவோம்

## தேர்தல் பிரசாரத்தில் பெண் வேட்பாளர்

யாழ்ப்பாணம்,மார்ச்25

மக்களை நெருங்கிச் சென்று சுயநிர்ணயத்துக்கான சுயாதீனமான உரையாடல்களை மேற்கொண்டு வருகிறோம். சுயத்தை உணர்ந்து வாக்களிக்க அவர்களை உந்தப் பண்ணுகிறோம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பெண் வேட்பாளர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்.

சுந்தரம் ஞானஜோதி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இளைஞர், யுவதிகளுக்கான தேர்தல் எழுச்சிக் கலந்துரையாடலில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவம் எம்மத்தியில் நிற்கிறது. மக்கள் திறந்த வெளிச் சிறைச்சாலையில் வாழ்ந்து நீண்டகாலம் தமது பிரச்சினைகள், தேவைகள், ஆசைகள் பற்றிப் பேசாமல் மௌனித்து இருக்கின்றார்கள். அதாவது சுயாதீனமான உரையாடலுக்குத் தயங்குகின்றனர். உண்மையில் இராணுவம எம் மண்ணைவிட்டு அகன்ற நிலையில்தான் மக்கள் சுயாதீனமான உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் தேர்தல்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய தெளிவு நிலைக்கு அவர்கள் வருவார்கள். என்றாலும் கூட அவசரத் தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

ஓரளவுக்கேனும் மக்கள் மத்தியில் உரையாடல்களை ஏற்படுத்துவதற்கு எம்மாலானமட்டும் முயற்சிககிறோம். பல யுவதிகளை இந்த உரையாடல்களை நடத்தக்கூடியவர்களாகப் பயிற்சி கொடுத்துள்ளோம்.

இந்தத் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று மக்கள் அங்கிருந்து ஆதரவான நிலையில் உரையாடல்களை தூண்டுகிறார்கள். இது கிராமதவர்களுக்கு தமது சுயத்தை விசாரணை செய்து கொள்ளவும், தமது எதிர்காலத்தை நிர்ணய்ம் செய்து கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது.

அதாவது சுயநிர்ணயத்துக்கான உரையாடல்களாக இந்த உரையாடல்கள் அமைகின்றன. தம் சுயத்தை நிர்ணயம் செய்த மக்கள் இந்தத் தேர்தல் மூலம் தமது உரிமையை இந்த உலகுக்கு ஆவணப்படுத்தத் தயாராகி வருகின்றனர் என்றார். (ஐ)

# தேர்தல் பிரசாரங்கள் நெடுந்தீவிலும் சூடு பிடிப்பு

கடந்த ஓரிரு நாள்களாக நெடுந்தீவுப் பகுதியில் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் மதனராஜா தலைமையில் ஈ.பி.டி.பி. கட்சியினர் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். வீடு வீடாகச்சென்று அவர்கள் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். அத்துடன், இரவு வேளைகளில் இவர்கள் வீடுகளின் கேற் வழியாகத் துண்டுப் பிரசுரங்களைப் போட்டும் வருகின்றனர்.

இதேவேளை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களும் பிரசார நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாகிய வீட்டுச் சின்னத்தின மாதிரியுடன் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஓட்டோவில் அவர்கள் தமது பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-ரி)

# பொதுநலவாய செயலகத்திலிருந்தும் தேர்தல் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு,மார்ச்25

ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலைக் கண்காணிப்பதற்கான குழுவொன்றை லண்டனிலுள்ள பொதுநலவாய செயலகம் அனுப்பவிருக்கின்றது.

ஏற்கனவே இலங்கையிலுள்ள பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்புப் பிரதிநிதிகளுடன் லண்டனிலிருந்து வரும் பிரதிநிதிகளும் சேர்ந்துகொள்வார்கள்.

தேர்தலுக்கான ஏற்பாடுகள் வாக்குகள் எண்ணப்படுதல் மற்றும் முடிவுகள் அறிவிக்கப்படும் முறைகள் பற்றி இவர்கள் கவனம் செலுத்துவார்கள்.

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் முன்னாள் செயலர் மார்கரெட் ரீட், மளாவி.கு. ரொனிக்கல், பிரதம ஆசிரியர் றொபேர்ட் ஜெமீசன், தென்னாபிரிக்கா பிணக்குகள் முகாமைத்துவ சிரேஷ்ட ஆலோசகர் இலோனா ரிப், இந்தியாவின் முன்னாள் தேர்தல ஆணையாளர் ஜே.எம்.லிண்டோ, நியூஸிலாந்தின் முன்னாள் பிரிட்டனுக்கான தூதர் போல் ஈஸ்ட், ஆசியாவுக்கான பொதுநலவாய இளைஞர் தூதுவர் டாக்டர் அஷிக்க சாலிம் போன்றவர்கள் லண்டன் பொதுநலவாய செயலகம் அனுப்பும் கண்காணிப்புக்குழுவில் இருப்பார்கள். (ப)

# ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து ஜனநாயகத்தைப் பறிக்க முயற்சி

## குற்றஞ்சாட்டுகிறார் வாசுதேவ



கொழும்பு,மார்ச்25

ஜனாதிபதியும் பிரதமரும் அதிகாரப் போட்டியில் இறங்கி ஜனநாயகத்தைப் பறிப்பதற்கு மேற்கொள்ளும் சந்தர்ப்பவாத முயற்சிகளைத் தோற்கடிப்பது வாக்காளரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

மாத்தறையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் புதிய இடதுசாரி முன்னணியின் தேசியப்பட்டியல வேட்பாளர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

பிரதான அரசியல் கட்சிகளின் அடிமை முகாம்களில் இருந்து நாட்டு மக்களை மீட்டெடுத்து உண்மையான தரத்தை வெளிப்படுத்தக் கூடிய வகையில் வாக்களிக்கக் கூடியவாறு வாக்காளரை வழிநடத்துவது எமது கட்சியின் நோக்கமாகும்.

எத்தகைய உறுதிமொழிகளை வழங்கினாலும் முன்னைய அரசு நாட்டிற்குப் பொருத்தமான பொருளாதரக கொள்கைகளை உருவாக்கும் திறன்களைக் கொண்டிருக்கவில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி 'இலங்கைக்கு புத்துயிர் ஊட்டுவோம்' என்ற திட்டத்தினூடாக தேசிய வளங்களைக கொள்ளையிட்டது. ஜே.வி.பியும் நாட்டின் எதிர்காலத்திற்கான கொள்கைகளைக் கொண்டிருக்கவில்லை - என்றும் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டினார். (ஐ-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

11ஸ்ரீ தொடர் இலக்கமுடைய ரொயாட்டோ கொறில்லா கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 711, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். T.P.222 6188. (29987)

குபேட்டா 75 - 70ஸ்ரீ தொடர் இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள லானட் மாஸ்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: 27/15, கச்சேரி புகையிரதக் கடவை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.077 6184396. (30013)

## தவறிவிட்டது

முள்ளானை ஒழுங்கை, இளவாலையைச் சேர்ந்த திரு.அலோசியஸ் மனோகரன் என்பவருடைய கடவுச்சீட்டு (Passport) இல.M/2133969 இளவாலைக்கும், யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். திரு. அலோசியஸ் மனோகரன், முள்ளானை ஒழுங்கை, இளவாலை. (29992)

## தேவை

4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், கொக்குவில், கோண்டாவில், இருபாலை, கோப்பாய், உடுவில் பகுதிகளில் விரும்பத்தக்கது. உடன் தொடர்பு கொள்ளவும்.வி.இல.:2206, மே/பா உதயன். (30001)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச திணைக்களம் ஒன்றில் உயர் பதவி வகிக்கும் 35 வயதுடைய மணமகனுக்கு ஓரளவு அழகான, செவ்வாய்க் குற்றமற்ற, தொழில்பார்க்கும் பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2207, மே/பா உதயன். (30012)

## கல்வியியற் கல்லூரியின் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் பயிற்சிபெற்றுத் தற்போது உள்ளகப் பயிற்சியை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கான மார்ச்மாதச் சம்பளம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணி முதல் கல்லூரி அலுவலகத்தில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சமய சந்நிதிகளில்

வலி.தெற்கு,மார்ச்25

சுன்னாகம் ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பதினொரு தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-10-152)

★ ★ ★

கோப்பாய்,மார்ச்25

வடகோவை ஸ்ரீசித்திர வேலாயுதர் சுவாமி கோயில் சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. மாலைத் திருவிழாவாக பூந்தண்டிகை உற்சவம் இடம்பெறும். (ஒ-10-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்25

வண்.மேற்கு, ஆனைக்கோட்டை ஸ்ரீவீரமாபிடாரி அம்மன் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேக திருக்குளிர்த்தி எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7மணிக்குக் கிராம ஊர்வலம் இடம்பெறும். (ஒ-10)


**வெல்டிங் வேலைக்கு ஆள்கள் தேவை**

சகலவிதமான கேற்.
கிறில் மற்றும் வெல்டிங்
வேலைகள் செய்வதற்கு
ஆள்கள் தேவை.
நேரில் வரவும்.

**சிறி அம்பாள் எலக்றிக்கல்ஸ்**

1039, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(29934) (21)



**NORTH EAST TECHNOLOGIES**

**No.34, SADDANATHAR ROAD, NALLUR, JAFFNA**

Tele: 021-2223786.0777-708498 (Hot line)
Web site: www.net.slt.lk

"உங்களுக்கு இயலக்கூடிய விலைகளில் கணனிகள்" ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உலகப் புகழ்பெற்ற IBM, COMPAQ, கணனிகளுடன் Toshiba Lap Top கணனிகளும் ரூபா 10,000இல் இருந்து உத்தரவாதத்துடன் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள உடனடியாக நாடுங்கள். குறைந்த கையிருப்பு மட்டுமே!

| | | |
|---|---|---|
| PI 150MHz | 32Ram | 2Gb |
| PI 200MHz (Tower) | 32Ram | 2Gb |
| PI 233MHz (Tower) | 64Ram | 3Gb |
| PII 366MHz | 64Ram | 6Gb |
| PII 350MHz | 64Ram | 6Gb |
| PII 400MHz | 64Ram | 6Gb |
| PII 450MHz | 64Ram | 4Gb |
| PIII 633MHz | 128Ram | 9Gb |
| PIII 666MHz | 128Ram | 9Gb |

Lap Top **கணனிகள்**

Intel Puntem III 600MHz Toshiba 64,000/=
Intel Celeron 600MHz Toshiba 59,000/=

THE PRICE IS ALL INCLUSIVE OF 15" SVGA COLOUR MONITOR, KEY BOARD & MOUSE, and MULTIMEDIA PACKEGES OF 32X CD ROM, SOUND CARD.
(6Month Warranty)

Computer Accessories at attractive Prices
BRAND NEW MACHINES

- P-IV 2.6GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor,
- P-IV 2.0GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor,
- AMD 1.8GHz, 40GB, 128RAM, 15"Philips Monitor,
- AMD 1.2GHz, (ATX Black) 40GB, 128RAM, 15"LG Monitor (Black)
- AMD 1.2GHz. 40GB, 128RAM, 15"Philips Monitor (3years Warranty)

"தகவல் தொழில்நுட்ப உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு கணனி"

(சி-33806) (26)



**வாடகைக்கு**

வீதி அமைத்தல், திருத்தப்பணிகளுக்குப்
பயன்படுத்தப்படும் வீதி றோலர்
(Road Roller - 10 Tons) வாடகைக்கு விடப்படும்.
விவரங்களுக்கு -

**கஜன் கொம்மினிகேஷன்**

இல.8, நவீன சந்தை,
பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P: 021-2222983

(30002)


## கண்ணீர் அஞ்சலி

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின்
ஆயுட்கால உறுப்பினர்

**சுப்பு சுந்தரம் (ஜே.பி.)**



அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்,
ச.மு.க.சமாச பிராந்திய சபையினர்,
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம்

(30003)(37-21-11-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னையின் மடியில் 13 - 07 - 1959



விண்ணின் அடியில் 26 - 02 - 2004

**திருமதி வாகீஸ்வரன் இரத்தினேஸ்வரி**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம.

இன்று (25. 03. 2004) வியாழக்கிழமை கீரிமலையில் நடைபெறுகின்ற அந்தியேட்டிக் கிரியை நிகழ்விலும் 27-03-2004- சனிக்கிழமை அன்னாரின வீட்டில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்:
அன்புக் கணவர் - சி.வாகீஸ்வரன்,
பிள்ளைகள், சகோதரர்,
மருமக்கள், மைத்துனர், பேரப்பிள்ளைகள்

நவாலி மேற்கு,
மானிப்பாய்.
(29976) (26-11-19-21)

# நாடாளுமன்றப் பொதுத்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போனது. இம்முறை இப்பகுதி மக்களும் ஏனைய பகுதியிலுள்ள தமிழ் மக்களும் உற்சாகமாக வாக்களிப்பின் நாலு பிரதிநிதிகளைப் பெறமுடியும் இதற்குப் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து 9 இடங்களில் இராணுவச் சாவடியைக் கடக்கவேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மக்களும் வாக்களிக்க வசதிகள் செய்துகொடுக்கப்படின் தமிழர் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வழிபிறக்கும் தேசியப் பட்டியலில் இரண்டாவது ஆசனத்தைப் பெற அது உதவும்

### திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்: இல.13

இம்மாவட்டம் 3,79,044 வாக்காளர்களையும் ஏழு பிரதிநிதித்துவத்தையும் கொண்டது. இங்கு முஸ்லிம்கள் 41 வீதமாகவும், சிங்களவர் 41 வீதமாகவும் தமிழர் 18 வீதமாகவுள்ளனர். மேலும் இம்மாவட்டம் முஸ்லிம் மக்களின் அரசியற் செயற்பாட்டில் ஒரு கொதிகளமாக விளங்குகிறது.

இங்கு தமிழ்மக்கள் யாவரும் பிரியாது இணைந்து வாக்களித்தால் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறலாம். வாக்குகள் பிரியுமாயின், பிரதிநிதித்துவத்தை இழக்கவேண்டியும் வரலாம். 1994 தேர்தலில் தமிழ் வாக்குகள் பிரிந்தமையால் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது. பின்னர் 2000, 2001 தேர்தல்களில் மாவட்ட மட்டத்தில் அங்கத்துவ எண்ணிக்கை 6இல் இருந்து 7ஆக அதிகரித்தமையாலும், தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதமுறையும் உயர்ந்ததாலும் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெறமுடிந்தது. இம்முறை இம்மாவட்டத்தில் நாற்கோணப்போட்டி நிலவுவதால் தமிழர் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைப்பதற்கு, முதன்மை நிலை பெறுவதற்கும் சந்தர்ப்பம் உண்டு. தமிழர்கள் வாக்களிப்பில் முழுமையாகப் பங்குகொண்டு விரயமில்லாது ஒருமுகப்பட்டு வாக்களிப்பின் மேற்கூறிய நிலைகளை அடையமுடியும்.


| இராணுவச் சோதனை சாவடி நிலையம் | கிராமங்கள் | மொத்த வாக்காளர் |
|---|---|---|
| செங்கலடி | | 8,968 |
| வவுணதீவு | 11கிராமங்கள் | 15,188 |
| கிரான் | 17கிராமங்கள் | 4,815 |
| வாகரை | 5கிராமங்கள் | 12,416 |
| குருக்கள் மடம் | 11கிராமங்கள் | 5,661 |
| மண்முனை (தோணி மூலம்) | 6கிராமங்கள் | 8,447 |
| பட்டிருப்பு (பாலம்) | | 12,418 |
| மண்டூர் | 14கிராமங்கள் | 7,457 |
| சந்தவெளி | 8கிராமங்கள் | 822 |
| மொத்தம் | | 76,192 |

தென்னிலங்கையிலுள்ள 17 தேர்தல் மாவட்டங்களுள் 16 மாவட்டங்களில் இரு அணிகளுக்கிடையே கடும போட்டி நிலவுகின்றது. நுவரெலியா தேர்தல் மாவட்டத்தில் மாத்திரம் இவ்விரு அணிகளுடன் மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய நான்கும் கடும் போட்டியில் ஈடுபட்டுள்ளன. தென்னிலங்கை தேர்தல் முடிவுகள் மிகவும் நெருக்கமாக அமையும் என்பது அரசியல் அவதானிகள் கருத்து. ஆகவே, தொங்கு நாடாளுமன்றம் என்பதால வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்களின் பங்களிப்பு உயர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த நாடாளுமன்றத்தில் இரண்டு பிரதான கட்சிகளுக்குத் தேசிய ஐக்கிய முன்னணி, மக்கள் கூட்டணிக்கு வெளியே ஜே.வி.பியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் தலா 16, 15 அங்கத்தவர்களைப் பெற்று முக்கியத்துவம் பெற்றிருந்தன. இம்முறை மக்கள் கூட்டணியும், ஜே.வி.பியும் இணைந்து மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியும், தேசிய ஐக்கிய முன்னணியும் 2 பிரதான கட்சிகளாக இருப்பதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) முக்கிய மூன்றாவது பெரிய கட்சியாக வர வாய்ப்பு உண்டு. இரண்டு பெரிய கூட்டணிக் கட்சிகளுக்கு வெளியே தெரிவுசெய்யப்படும். அங்கத்தவர்களும் தமிழர், முஸ்லிமகளாகவே இருப்பர். இதனால் புதிய நாடாளுமன்றத்தில் தமிழர் நல்லதோர் இடத்தைப் பிடிக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டு.

தென்னிலங்கைத் தேர்தல் பிரசாரத்தில் இனப்பிரச்சினைச் சமாதான முன்னெடுப்புக்கள் பேசப்பட்டாலும் ஊழல், வாழ்க்கைச்செலவு, வறுமை, வேலைவாய்ப்பு வெளிநாட்டுத்தலையடுகள், நிறைவேற்று ஜனாதிபதிக்கும் - நாடாளுமன்றத்திற்கும் இடையேயான முரண்பாடுகள் போன்றன முக்கிய இடம்பெற்றுள்ளன. வடக்கு - கிழக்கு பகுதியில் தமிழர் தேசியப் பிரச்சினைகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு, சமாதான முன்னெடுப்பு, இறுதியான அரசியல்தீர்வுகள் பற்றிய விடயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன

இத்தகைய பின்புலத்தில் கட்சிகள் கூட்டுச்சேர்ந்து போட்டியிடுவதால் எப்படித் தேர்தல் முடிவுகள் அமையுமெனச் சொல்லமுடியாது - பொதுவான போக்குகளை அவதானிக்குமிடத்து - ஐக்கிய தேசிய முன்னணி கொழும்பு, கண்டி, நுவரெலியா, பதுளை, மாத்தறை, புத்தளம் ஆகிய தேர்தல் மாவட்டங்களிலும் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி கம்பஹா, களுத்துறை காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலன்நறுவை, குருநாகல், மொனராகலை, இரத்தினபுரி, கேகாலையிலும் தமிழ்த்தேசிய முன்னணி யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டங்களிலும் - முன்னணியில் நிற்பதாகக் கருத இடமுண்டு.

திகாமடுல்ல, திருகோணமலை தேர்தல் மாவட்டங்களில் மிகவும் கடுமையான போட்டி நிலவுவதால் முடிவுகள் எவ்வாறு அமையும் என இருந்து பார்க்கவேண்டும்.



தேர்தலுக்கு இன்னும் நாள்கள் இருப்பதால் நாளுக்குநாள், நிமிடத்துக்கு நிமிடம் மாறும் சூழ்நிலைகளால் மாற்றங்கள் ஏற்படலாம். ஆகவே, இன்றுள்ள சந்தர்ப்பத்தைத் தமிழ் மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படவேண்டும்.

(முற்றும்)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

**இராமநாதன் நுண்கலைக் கழகச் செயற்பாடுகளை முன்னேற்றுதல் பற்றிய விசாரணை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை இராமநாதன் நுண்கலைக கழகத்தின் செயற்பாடுகளை முன்னேற்றுதல் சம்பந்தமாகப் பரிந்துரைகள் செய்வதற்குக் குழுவொன்றை நியமித்துள்ளது. இக்குழு கழகத்தின் நிர்வாகம், கற்பித்தல், தேர்வுகள், ஒழுங்குபேணல் ஆகியன குறித்து விசேட கவனம் செலுத்தும்.

மேற்குறித்த விடயங்கள் சம்பந்தமாகக் கருத்துக்கள், ஆலோசனைகள் தெரிவிக்க விரும்பும் இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்கள், மாணவரின் பெற்றோர், பழைய மாணவர்கள், கழக ஆசிரியர்கள் மற்றும் இக் கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட நலன்விரும்பிகள் போன்றோர் தம் கருத்துக்களை 31.03.2004 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக **"தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழக விசாரணைக் குழு, விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு நேரடியாக அல்லது தபால்மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இராமநாதன் நுண்கலைக்கழக விசாரணை"** என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முழுப்பெயரும் முகவரியும் குறிப்பிடாத கருத்துக்கள், ஆலோசனைகள், முறைப்பாடுகள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டாது. குழுமுன் சாட்சியமளிக்க விரும்புவோர் தமது விருப்பத்தைக் கடிதமூலம் தெரியப் படுத்தலாம். ஒழுங்கீனங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் மற்றும் சாட்சியங்களை கிடைப்பின் அவை பற்றித் தகவல் தருபவர்களது அடையாளம் வேறெவருக்கும் தெரியவராதிருப்பது உறுதிசெய்யப்படும் (அடையாளமும் அவர்கள தரும் தகவல்களும் இரகசியமாக வைத்திருக்கப்படும்). இக்குழு முன் சாட்சியமளிக்கும் போது குழுவினர் தவிர்ந்த வேறெவரும் பிரசன்னமாயிருக்க மாட்டார்கள்.

**பதிவாளர்,**
23.03.2004

(29995)(34-21-24-13)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 563 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 23.03.2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4607141-4620899 |

வெற்றி இலக்கங்கள் **02 32 39 55**

லக்கினம் சிங்கம்




ஜக்பொட் பரிசு
ரூபா. 3,035,300/-
வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,707,800/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 301,034 | 10 | 3,010,340 |
| 2 இலக்கங்கள் | 27,411 | 20 | 822,330 |
| 1 இல + லக்கினம் | 27,627 | 30 | 552,540 |
| 2 இல + லக்கினம் | 2,542 | 100 | 254,200 |
| 3 இலக்கங்கள் | 736 | 500 | 368,000 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,035,300 | - |
| மொத்தம் | 359,423 | - | 5,752,410 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,752,410/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4609888-5-50
4614382-2-57
4619047-8-73
4614562-1-51
4608732-9-92

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செல்ற் லைக்கள் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# ஹொக்கி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்25

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை மாவட்ட ரீதியாக நடத்தும் ஏழுபேர் கொண்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் பல்கலைக்கழக ஆடுகளத்தில் இடம் பெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு

☆ பிற்பகல் 4 மணி - யாழ். பல்கலைக்கழ அணி (புளூஸ்) எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க.பி அணி.

☆ பிற்பகல் 4.30 மணி - யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானப்பிரிவு பி அணி எதிர் சென்றலைற்ஸ் வி.க அணி.

☆ மாலை 5 மணி - யாழ். பல்கலைக்கழ அணி (கோல்ட்ஸ்) எதிர் யங்ஹென்றீசியன் வி.க அணி. மாலை 5.30 மணி - ஓல்ட் கொல்ட்ஸ வி.க எதிர் வடமராட்சி வி.க.(ம-5)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்25

இணுவில் பொதுநூலகமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய கரம், மரதன் மற்றும் சைக்கிள் ஓட்டம் என்பவற்றில் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

**கரம் (ஒற்றையர் ஆண்)**

முதலாமிடம் எஸ்.சற்குணமூர்த்தி (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் ஜே.மோகன் (யாழ்ப்பாணம்).

**கரம் (ஒற்றையர் பெண்)**

முதலாமிடம் டி.சுகன்ஜா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் எஸ்.சிவரஞ்சினி (தாவடி).

**கரம் (இரட்டையர் ஆண்)**

முதலாமிடம் எம்.குகதீபன் - ஜோகானந்த் (நாச்சிமார் கோயிலடி), இரண்டாமிடம் கெ.குணதாஸ் - பவானந்த் (நாச்சிமார் கோயிலடி).

**கரம் (கலப்பு இரட்டையர்கள்)**

முதலாமிடம் எம்.ஆஹாஸ் டி.சுகன்யா (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் ரி.சசிகரன், என். அஜந்தாஜினி (இணுவில்).

**மரதன் ஓட்டம்**

முதலாமிடம் ந.காந்தரூபன் (பண்டத்தரிப்பு), இரண்டாமிடம் சி.சிவனேசன் (பண்டத்தரிப்பு), மூன்றாமிடம் ம.கபிலன் (உடுவில்).

**சைக்கிள் ஓட்டம்**

முதலாமிடம் செ.அனுசா (பண்டத்தரிப்பு), இரண்டாமிடம் பா.கௌசிகா (மானிப்பாய்), மூன்றாமிடம் கே.சிந்துஜா (இணுவில்). (ம-5)


## உடன் தேவை

**R.L.தொலைபேசி தேவை.**
விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.
**நியூ வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ் சாவகச்சேரி**
தொலைபேசி இல. 0712-324412
**வீ.எம்.கே.ஜுவல்லர்ஸ் யாழ்ப்பாணம்**
தொலைபேசிஇல. 021-222-7339.
(சி-33813)(26


# ஈராண்டு நினைவலைகள்



| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 04 - 04 - 1943 | | 19 - 03 - 2002 |

## அமரர் கந்தையா விநாயகமூர்த்தி

திதி:25.03.2004

கணவனாய் வாழ்வு தந்து
தந்தையாய் உயர்வு தந்து
எம்மை அன்பால் அரவணைத்த
அன்புத் தெய்வமே!
உமது உடல் மட்டும் எம்மைவிட்டு
அகன்றதே தவிர உள்ளமும் உருவமும்
எம்மிடந்தான் தொடர்ந்திருக்கும்.

சென் ஆன்ஸ் சேச் லேன்,
மானிப்பாய்.

(30011)

உமது பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(13-21-26)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 - 11 - 1901 | | 25 - 03 - 2001 |

## திருமதி பிலிப்பு செல்லம்மா

தன்னையே கரைத்து தான் ஈன்றவர்களை
தரணியில் தலை நிமிர்ந்து நிற்க
அரும்பாடுபட்டு நீண்டகாலம் வாழ்ந்து
மீளாத் துயில்கொண்ட உங்களை
இந்நாளில் நினைவு கூருகிறோம்.

தகவல்: மகன ***பிலிப்பு தருமநாயகம்***
43/12, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

**அனைத்துக் குடும்பத்தவர்கள்.**

(29980) (26-21-13)

# மரண அறிவித்தல்கள்

## குணசிங்கம் ரங்கேந்திரன்



கல்வியங்காடு, ராஜ வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் ரங்கேந்திரன் (23.03.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ராஜவீதியைச் சேர்ந்த குணசிங்கம் -அன்னலட்சுமியின் அன்பு மகனும், ரமேஸ் (டென்மார்க்), றமா (கனடா), றமணன் (கனடா), றமணி (இந்தியா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் இந்துஜா, றோசினி, பூஜா ஆகியோரின் மாமனாரும் உதயா, இந்திரன், பிரவீன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2004) வியாழக்கிழமை பி.ப 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ராஜ வீதி,*
*கல்வியங்காடு.*

தகவல்
**கு.அன்னலட்சுமி**
**(தாய்)**

(30010)(37-21-13-26)

## திருவருள் குலசிங்கம்

**(பொன்னுக்கண்டு - சின்னண்ணை)**
**(Retired Reporter, Colombo Municipal Council)**

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது லண்டனில் வாழ்ந்தவரான திருவருள் குலசிங்கம் அவர்கள் 20.03.2004 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 27-03-2004 சனிக்கிழமை கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 28.03.2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பின்னர் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.*
(30017) (26-21-13)

தகவல்:
**தி.விஜயசிங்கம்,**
**தி.துரைராசசிங்கம (தம்பிப்பிள்ளை)**
**திருமதி குமாரசாமி (சகோதரர்கள்)**


# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்



தேச விடுதலைக் களங்களில்
நின்றவன்.
தமிழர் எழுச்சியே மூச்சாகக்
கொண்டவன்.

X 1X

# சொலமன் சூசைப்பிள்ளை சிறில்

தேசத் தொண்டரைத் தெரிந்து வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது!

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்.

# கூட்டணியின் தலைமைத்துவம் குறித்து தேர்தலுக்குப் பின்னர் சட்ட நடவடிக்கை!

## செயலாளர் நாயகம் சம்பந்தன் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்25

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைமைத்துவம் தொடர்பில் தேர்தலுக்குப் பின்னர் சட்ட நடிவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம்.

- இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன்.

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அவர் உதயனுக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு தெரிவித்தார்.

உந்தச் செவ்வியின் விவரம் வருமாறு:-

*கேள்வி:* திருகோணமலையில் தேர்தல் நிலை எப்படியிருக்கின்றது?

*பதில்:* திருமலையில் ஓரளவு திருப்திகரமாக உள்ளது. ஏற்கனவே வாக்களிப்புத் தொடர்பாகச் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தோம். இதில் சில மாற்றங்கள் செய்ய முயற்சி எடுக்கப்பட்டபோதும், அவை நடைபெறவில்லை. கூடுதலான வீதத்தில் மக்கள் வாக்களிக்கக் கடும் முயற்சி எடுத்துள்ளோம். திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியுள்ள மக்கள் திருமலைக்கு வந்து வாக்களிக்க வசதி செய்துள்ளோம். முஸ்லிம் மக்கள் மத்தியில் சென்று பிரசாரம் செய்கின்றோம். இடைக்கால நிர்வாகம் ஒன்றுவரும்போது முஸ்லிம் மக்களும் எம்முடன் கைகோத்து நின்று, நன்மையடையுமாறு அவர்களிடம் கேட்டுள்ளோம்.

குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே புரிந்துணர்வு இருக்க வேண்டியது அவசியம். இதை வலியுறுத்தி முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றோம்.

*கேள்வி:* மட்டு - அம்பாறை நிலைமை எப்படியிருக்கின்றது?

*பதில்:* மட்டு - அம்பறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் பிரசாரம் இடம்பெறுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று எவராலும் சொல்லப்படவில்லை. அதற்கு மாறாகத் தமிழ்க் கூட்டமைபபுக்குச் சாதகமாக வாக்களிக்க வேண்டும் என்ற கருத்துச் சகலருக்கும் சொல்லப்பட்டுள்ளது. ஆகையால் மட்டு - அம்பாறையில் ஏற்பட்டுள்ள சர்ச்சையின் காரணமாக தேர்தலில் குழப்பம் வரவேண்டிய அவசியம் இல்லை என்றுதான் கருதுகிறேன்.

மக்கள் கொள்கை அடிப்படையில் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். அதாவது இணைந்த வடக்கு - கிழக்குத் தாயகம் என்பது தந்தை செல்வாவினால் 50வருடங்களுக்கு முன்பாக நிரூபிக்கப்பட்ட ஒரு விடயம். அந்த விடயத்தில் இருந்து தமிழ்மக்கள் விலகிப்போகக் கூடிய நிலை இல்லை.

சமீபத்தில்கூட, 2002 டிசெம்பரில் ஒஸ்லோ பிரகடனம் ஊடாகவும் 2003 ஒக்ரோபரில் முன்வைக்கப்பட்ட இடைகால நிர்வாகக் கோரிக்கை ஊடாகவும் தாயகக் கோட்பாடு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, அதில் இருந்து விலகுவது ஒரு யதார்த்தமான நிலைப்பாடு இல்லை.

*கேள்வி:* இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டமைப்பில் போட்டியிடுகிறது. இதேவேளை சுயேச்சைக்குழு சார்பில் போட்டியிடும் வீ.ஆனந்தசங்கரி தன்னைக் கூட்டணியின் தலைவர் எனக் கூறிப் பிரசாரம் செய்கிறார். இது குறித்து....?

*பதில்:* எமது மத்தியகுழு அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அவர் நீதிமன்றத்துக்குச் சென்று சில தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளார். அந்த நீதிமன்றங்களில் அவருக்குச் சார்பாகக் கட்டளை இடுவதற்கான நிலைமை இருக்கின்ற காரணத்தால் அவர் தடை உத்தரவுகளைப் பெற்றுள்ளார். அது தொடர்பாக மேலதிக சட்ட நடவடிக்கைகளைத் தேர்தல் காரணமாகச் செய்யவில்லை. தேர்தல் முடிந்த பின் கூட்டணியின் மத்தியகுழு, பொதுக்குழு போன்ற அதிகார மையங்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க உள்ளன.


*கேள்வி:* கூட்டணியை இதுவரை தானே வளர்த்து வந்தார் என்று அவர் கூறுவது குறித்து...?

*பதில்:* அவர் கூட்டணியை வளர்த்தாரா இல்லையா என்பது குறித்து மக்களுக்குத் தெரியும். அலுவலகத்துக்கு ஒரு மேசையையும் நான்கு கதிரைகளையும் மட்டும் வாங்கிப் போட்டுவிட்டுக் கூட்டணியை வளர்த்ததாகக் கூறமுடியுமா? முதலில் கூட்டணியின் கொள்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அதிபாதுகாப்பு வலயங்களில் இருந்து இராணுவம் வெளியேறி மக்கள் மீளக்குடியமர முடியாமல் இருப்பது கூட்டணியின் கொள்கையா? அல்லது இடைக்கால நிர்வாக அமைப்பைப் பலவீனமான அரசிடம் கேட்கக்கூடாது என்று கூறுவது கூட்டணியின் கொள்கையா? கூட்டணியின் தலைவராக இருந்தவர் இப்படியான கருத்துக்களைச் சொல்லலாமா? இதுதான் அவருக்கும் எமக்கும் இடையில் உள்ள பிரச்சினை.

நாங்களும் போராளிகளும் சேர்ந்து செயற்படுகின்ற நிலைமை உருவாகி தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் சேர்ந்துள்ள நிலையில் அவர் அந்தக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட வேண்டும். ஆரம்பக் கூட்டத்தில் அவர்தான இணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

போராளிகளுடன் சேர்ந்து செயற்பட வேண்டும் பேசவேண்டிய விடயங்களைக் கிளிநொச்சிக்குச் சென்று அவர்களுக்குக் கருத்துக்களைத் தெரிவித்து, பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். பத்திரிகைகளுடன் பேசமுடியாது. இதுதான் உள்ள பிரச்சினை. அவர் குழப்பியிருக்கலாம். நாங்கள் குழப்பவில்லை.



*கேள்வி:* மட்டு - அம்பாறையில் தெரிவு செய்யப்படும் எம்.பிக்கள் உங்கள் கட்சியுடன் சேர்ந்து செயற்படக்கூடிய நிலை ஏற்படுமா?

*பதில்:* அப்படியான நிலைமைதான் ஏற்படும். ஒருகட்சியின் பேரில்தான் தெரிவு செய்யப்படுகிறார்கள். இதற்கு மேலதிகமாகத் தற்சமயம் பேசவேண்டிய அவசியம் இல்லை.

*கேள்வி:* தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகம் ஆனந்தசங்கரி வசம் உள்ளது. சட்டப்படி அவர் அந்த அலுவலகத்தைத் தன் வசம் வைத்திருக்க முடியுமா?

*பதில்:* தேர்தல் முடிந்த பின்னர் கூட்டணியின் மத்திய குழுவும் செயற்குழுவும் கூடி இதுபற்றி முடிவு செய்யும். (ஒ-3)

---

# கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விக்கும் சாதனை மாதம் இது!





'கனவான்களின் விளையாட்டு' என்று வர்ணிக்கப்படும் 'கிரிக்கெட்' விளையாட்டு .

இன்று கிரிக்கெட் பெரிய அளவில் ஆடப்படாத நாடுகளைச் சேர்ந்தவர்களையும் கவர்ந்து வருகிறது.

இதுவரை காலமும் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம்காட்டாத அமெரிக்கா கூடத் தற்போது 'கிரிக்கெட்' ஆட்டத்தில் ஈடுபட முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அந்த அளவுக்கு கிரிக்கெட் ரசிகர்கள் உலகில் அதிகரித்து வருகிறார்கள்.


'கிரிக்கெட்' ஆட்டத்துக்கு இந்த மாதம் சாதனை மாதமாக உள்ளது என்று கூறப்படும் வகையில் சாதனைகள் பலவும் இந்த மாதத்தில் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. டெஸ்ட் போட்டிகளிலும் சரி ஒருநாள் போட்டிகளிலும் சரி சாதனைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

### 500 விக்கெட்டுக்கள்

கிரிக்கெட் ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 500 டெஸ்ட் விக்கெட்டுக்கள் என்ற சாதனையை நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர்கள் இருவர் அடுத்தடுத்து எட்டிப்பிடித்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஆஸ்திரேலிய அணியின் ஷேன்வோர்ன். மற்றவர் இலங்கை அணியின் முத்தையா முரளிதரன். இருவரில் யார் முதலில் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்றப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு சமீபகாலமாக அதிகரித்திருந்தது. 491 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்த ஷேன்வோர்ன் ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றத்துக்காக ஒருவருட காலத்துக்கும் மேலாக சர்வதேசப் போட்டிகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டிருந்தார். அவர் தடை நீங்கி இலங்கைச் சுற்றுப்பயணத்தில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரும் தனது ரசிகர்களை ஏமாற்றாமல் தடைக்குப் பின்னர் கலந்துகொண்ட முதலாவது ஆட்டத்திலேயே 500 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றினார். அவருக்குத் தானும் சளைத்தவர் அல்ல என்பதை முரளிதரனும் உடனேயே நிரூபித்துக்காட்டினார். அவரும் தனது 87 ஆவது போட்டியில் இந்தச் சாதனையை எட்டினார். இனியும் இவர்கள் இருவருக்குமான போட்டி தொடரப் போகிறது. கொட்னி வோல்ஸின் 519 விக்கெட் சாதனையை முதலில் முறியடிக்கப்போவது யார் என்பதே இப்போதைய எதிர்பார்ப்பாகும். தற்பொழுது 511 விக்கெட்டுக்களுடன் வோர்னும் 505 விக்கெட்டுக்களுடன் முரளியும் (நேற்று ஆரம்பமான போட்டிக்கு முன்னர்) உள்ளனர்.

இதேசமயம், ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ராத் 500 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற வாய்ப்பு உண்டு. ஏனெனில் அவர் இப்போது 430 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். துரதிஷ்ட வசமாகக் கடந்த 8 மாதங்களாக இவர் எந்தப் போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. கணுக்காலில் ஏற்பட்ட காயத்தினால் இவருக்கு மூன்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலப் பகுதியில் ஆஸ்திரேலிய அணி, பங்களாதேஷ், இந்தியா மற்றும் இலங்கை அணிகளுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளது. இந்தப் போட்டிகளில் மக்ராத் விளையாடி இருந்தால் குறைந்தது 450 விக்கெட்டுக்கள் என்ற இலக்கை அடைந்திருப்பார் என்று நம்பப்படுகிறது. இனி அவர் உடல் தகுதிபெற்று ஆஸ்திரேலிய அணியில் மீண்டும் விளையாடினால் 500 விக்கெட்டுக்களை கைப்பற்றும் வாய்ப்பு அவருக்குக்கிட்டும்.

**ஜெயஸ்ரீ**



### சகலதுறை வீரர்

பந்துவீச்சில் மட்டுமன்றி துடுப்பாட்டத்திலும் சிறந்து விளங்கும் ஒருவரும் இம்மாதம் சாதனைபுரிந்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 200 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றியதுடன் 3 ஆயிரம் ஓட்டங்களையும் பெற்றுள்ளார் அவர். இந்தச் சாதனையை நிகழ்த்தியவர் நியூஸிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறிஸ்கெயின்ஸ் ஆவார். இதன் மூலம் மேற்படி சாதனையை நிகழ்த்திய ஆறாவது வீரராக இவர் இடம்பெற்றுள்ளார். தென்னாபிரிக்க அணிக்கெதிரான போட்டியில் இச்சாதனையை அவர் நிலைநாட்டினார். இச்சாதனை நியூஸிலாந்து அணியின் முன்னாள் தலைவர் றிச்சர்ட் ஹாட்லி, மேற்கிந்திய அணியின் முன்னாள் தலைவர் காரிபீல்ட் சோபர்ஸ், இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் இயன்பொதம், இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ், பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் ஆகியோரே முன்னதாக நிலைநாட்டியிருந்தனர்.

### சச்சின் சாதனை

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றுள்ளவரான இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் இந்த மாதம் 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். தனது 330 போட்டிகளில் அவர், 13 ஆயிரத்து 90 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பாகிஸ்தான் அணியுடனான ஆட்டத்திலேயே 13 ஆயிரம் ஓட்டங்களை அவர் கடந்தார். இவருக்கு அடுத்த இடத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல்ஹக் 9 ஆயிரத்து 758 ஓட்டங்களுடன் உள்ளார். தொடர்ந்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் அஸாருதீன் 9 ஆயிரத்து 378 ஓட்டங்களுடனும் இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா 9 ஆயிரத்து 284 ஓட்டங்களுடனும், இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்குலி 9 ஆயிரத்து 258 ஓட்டங்களுடனும், இலங்கை அணியின் சனத் ஜய சூரிய 9 ஆயிரத்து 248 ஓட்டங்களுடனும் உள்ளனர்.

### அபூர்வ வெற்றி

கிரிக்கெட் மட்டுமன்றி, எந்த விளையாட்டிலுமே வெற்றி தோல்வி சகஜமானதுதான். ஆனால், சில அணிகள் வெற்றிபெறுவதே அபூர்வமான ஒன்றாக இருக்கும். அவ்வணியின் வெற்றி கூட சாதனையாகக் கருதப்படலாம் அல்லவா? இந்த வகையில்தான் பங்களாதேஷ் கிரிட்கெட் அணி ஒருநாள் போட்டியொன்றில் வெற்றியீட்டியதும் சாதனையாகக் கருதப்படுகிறது.

1999ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணியை இவ்வணி வென்றது. அதன் பின்னர் இந்த மாதம் சிம்பாப்வே அணியுடனான போட்டியொன்றில் அது வெற்றியீட்டியுள்ளது. இதுவரை காலமும் பங்களாதேஷ் அணி விளையாடிய ஒருநாள் போட்டிகளில் 3 போட்டிகளில் மட்டுமே அது வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாதத்தில் இன்னும் ஆறு தினங்களே மிகுதியாக உள்ளன. இந்த நாள்களில் சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்களும் தொடர்ந்து நடக்கின்றன. இந்தச் சாதனை மாதத்தில் மேலும் எத்தனை சாதனைகள் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விக்கப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

★

# மரண அறிவித்தல்

## சோமாஸ்கந்தா குகேந்திரரூபன்

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சோமாஸ்கந்தா குகேந்திரரூபன் நேற்று (24.03.2004) புதன்கிழமை காலை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமாஸ்கந்தா (முன்னாள் சிறாப்பர், வர்த்தக வங்கி) - கௌரியம்மா ஆகியோரின் அருமை மகனும் இளையதம்பி (முன்னாள் சுகாதாரப்பிரிவு உத்தியோகத்தர்) - காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அருமை மருமகனும் சிவகௌரி (லண்டன்) அவர்களின் பாசமிகு கணவரும் சுஜிதனின் அன்புத் தந்தையாரும் குகச்செல்வி, அற்புதரூபன் (பிரான்ஸ்), நிரூபன் (டென்மார்க்), சொரூபவதி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவகுமார் (கனடா), சிவநேசன் (லண்டன்), சிவதாசன் (லண்டன்), சிவரூபன் (லண்டன்), செந்தமிழ்ச்செல்வி (கொழும்பு), சிவகங்கா (லண்டன்), சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.03.2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கௌ.சோமாஸ்கந்தா (தாய்).

*224, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (30023)(34-13;17-24)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்25

பலாலி ஆசிரியர் கலாசாலை சைவ மாணவர் மன்றத்தின் 'சைவ விளக்கு' நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்றத் தலைவர் சு.ப.சுதர்சன் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதமவிருந்தினராகப் பண்டிதர் க.சச்சிதானந்தமும் சிறப்பு விருந்தினர்களாகப் பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.வேதநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் த.காங்கேசபிள்ளையும் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்தவுள்ளனர்.

(எ-10)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சபாநாயகம்

*(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி)*

மூளாயைப் பிறப்பிடமாகவும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சபாநாயகம் அவர்கள் நேற்று (24.03.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் சிவகுமார் (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), றஜினா, சந்திரசேகரன் (ஜேர்மனி), சறோஜாதேவி (சமுர்த்தி முகாமையாளர், வலி.மேற்கு, சங்கானை), விக்னேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராகினி, சிவபாலன் (பிரதேச செயலகம், சங்கானை), சிவதேவி (ஜேர்மனி), கருணாநிதி (சுகாதார பரிசோதகர், நல்லூர்), ஹேமா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஸ்தூரி, பிரணவன், கோகுலன், சாமினி, விஜயராகவன், அபிலாஷ் (ஜேர்மனி), தனுஸ்ரிகா, சாருகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் இன்று (25.03.2004) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.* (C/33817)(34-13-17-24)

தகவல்:
ச.சிவகுமார் (மகன்).

## கந்தையா முத்துலிங்கம்

யாழ். கல்வியங்காடு விளையாட்டு அரங்க வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா முத்துலிங்கம் கடந்த 21.03.2004 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் முன்னாள் சமாதான நீதிவானும் யாழ். நித்தியா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும் ஞானபாஸ்கரோதய சங்க முன்னாள் தலைவரும் நிததியலிங்கம் (லண்டன்), திவாகரன் (ஆஸ்திரேலியா), கீதாஞ்சலி (லண்டன்), சங்கீதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசலட்சுமி (கமலா), விக்கினேஸ்வரன் (சிறி) (ராஜா ஸ்ரோர்ஸ் நவீன சந்தை, யாழ். / கொழும்பு உரிமையாளர்), காலஞ்சென்ற மகேஸ்வரி (சின்னமணி), காலஞ்செனற பொன்னம்மா (சின்னத்தங்கச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தையா (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர்), சுப்பிரமணியம், கனகாம்பிகை, காலஞ்சென்ற கதிர்காம சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் காண்டீபன் (லண்டன்), ஷீலாதேவி (லண்டன்), சுகந்தினி (ஆஸ்திரேலியா), ராஜாராம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆர்த்தி, கௌதம், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.3, ஆட்டுப்பட்டித் தெரு (ஒழுங்கை), கொழும்பு 13 இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (25.03.2004) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டு, பொரளை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.3, ஆட்டுப்பட்டித் தெரு (ஒழுங்கை),*
*கொழும்பு - 13.*
தொ.பேசி: 2380429 (30020)(34-13-17-24)

தகவல்:
மனைவி, மக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.


தமிழ் மக்களின் அரசியல் பலத்தினை நிர்ணயிப்பதற்கான தேர்தல்



எழுச்சி கொண்ட மக்கள் சக்தியை எந்தவொரு சக்தியாலும் அசைக்க முடியாது என்பதனை செயலுருவில் நிரூபித்துக் காட்டியவன்.

செல்வராஜா கஜேந்திரன்

முன்னாள் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர்.

X 10

வடமராட்சி கிழக்கு வாழ்மக்கள்



கடவுளே

அன்று



குப்பி விளக்கு பத்தவைப்பதற்கு
மண்ணெண்ண கூட இல்லாம
நாம எப்படி வாழ?

யுத்தத்தோட கொடும அத அனுபவித்த எமக்கு தான் தெரியும். தண்ணி இல்ல.லைட் இல்ல, ரோட்டால ஒரு பக்கம் போக முடியல, மருந்து வாங்க முடியல. சாப்பிட முடியல.பருக முடியல.

இன்று



ஆனா கடந்த ரெண்டு வருஷமா... ரோட்டுகள் திறந்தாச்சு - மின்சாரம் கிடைத்தது. கண்ணி வெடி இல்லாம போனது. கடைகள் திறந்தாச்சு. சாமான் வில குறைந்தது. சாப்பிட பருக முடிந்தது. எமக்கும் உண்டு களித்து வாழ உரிமை இருக்கிறது. அதற்கு தான் நாம நிலையான சமாதானத்துக்கு விருப்பம். நிலையான சமாதானத்த நிலைநாட்ட போராடும் ஐதேகட்சிக்கு எமது ஆதரவயும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு எமது ஆசிர்வாதத்தயும் தெரிவிக்கனும்.



X

நாட்டை வளமாக்க
சமாதானத்தைத் தேர்ந்தெடுங்கள்.

## இலங்கை மின்சார சபை
## யாழ்.பிரதேச அலுவலகம்
## மின் தடை பற்றிய அறிவித்தல்

2004.03.24 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மின்தடை பற்றிய விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 2004.03.27 ஆம் திகதி மின்தடை தவிர்க்கமுடியாத காரணத்தினால் அன்று நடைமுறைப்படுத்தப்படாது என்பதைச் சகல மின்பாவனையாளருக்கும் அறியத்தருகின்றேன்.

அந்தத்தினத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான மின்தடை பிறிதொரு தினத்தில் இடம்பெறும் என்பதையும் அறியத்தருகிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,<br>
இலங்கை மின்சார சபை,<br>
யாழ்.பிரதேச அலுவலகம், சுன்னாகம்.


*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும"*

(C/33822)(38-12-40) இலங்கை மின்சார சபை.

---

*வடமராட்சி அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள்*

## தேவஸ்தான தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்



**அம்பாள் அடியார்களே!**

பங்குனி 13 ஆம் நாள் 26.03.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.<br>
பகல் 11.30 மணிக்கு பச்சை சாத்துதல்<br>
பகல் 12.00 மணிக்கு நவசக்தி அர்ச்சனை<br>
பகல் 12.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்<br>
பங்குனி 14 ஆம் நாள் 27.03.2004 சனிக்கிழமை<br>
காலை 9.00 மணிக்கு மணவாளக்கோல சங்காபிஷேகம்<br>
காலை 11.00 மணிக்கு தீர்த்தோற்சவம்<br>
காலை 12.00 மணிக்கு கொடியிறக்கம்<br>
தொடர்ந்து திருவூஞ்சலும் விபூதிப்பிரசாதம் வழங்கலும் இடம்பெறும்.

அடியார்கள் வருக! அம்பிகை அருள் பெறுக!!

அம்பாள் அருள்வழியிலுள்ள<br>
கண்ணகை அம்பாள் ஆலய<br>
பரிபாலன சபையினர்.

*தேவரையாளி,*<br>
*அல்வாய் மேற்கு,*<br>
*அல்வாய்.* (30021)(37-12-40)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின் தலைமைக் காரியாலய சமுர்த்தி முகாமையாளர் திருமதி கருணாநிதி சறோஜாதேவி அவர்களின் பாசமிகு தந்தையார்

### வேலுப்பிள்ளை சபாநாயகம்


அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*சமுர்த்தி முகாமையாளரும்*<br>
*அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்*<br>
*பிரதேச செயலகம், சங்கானை.*

(33826)(12-40)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 09 |  | 25 |
| 07 | | 02 |
| 1931 | | 2004 |

### அமரர் கதிரன் சிவலிங்கம்
**(மேஸ்திரியார்)**

*அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த*<br>
*உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்கிறோம்.*

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.03.2004) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாவலூர் தெணி அம்மன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவுத் துயரில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்புள்ளங்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த இதய சுத்தியுடன் கூடிய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அவ்வொல்லை வீதி,*<br>
*புலோலி மத்தி,*<br>
*பருத்தித்துறை* (30028)(40-12)

**அன்பு மனைவி,**<br>
**மக்கள்.**

---

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்25

கொக்குவில் இந்து கனிஷ்ட பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வனமைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி ச.சகாதேவன் தலைமையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராகத் தொழிலதிபர் எம்.சுப்பிரமணியம் தம்பதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

---

## விற்பனைக்கு

துன்னாலை கிழக்கு கரவெட்டியில் உள்ள 200 சதுர அடியிலான வீடு உடைத்து விற்பனைக்குண்டு. உடைந்த பாகங்கள் தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

**T.P: 077 6093031**<br>
**க.ஸ்ரீதரன்**<br>
C/O விநாயகமூர்த்தி திலகவதி<br>
"திலகஸ்தான்"<br>
துன்னாலை கிழக்கு கரவெட்டி.<br>
*இன்றும் நாளையும் மட்டும் தொடர்புகொள்ளவும்.*

(30031)(40)

---

## தேவை

IIT மல்லாகம் கணனி நிறுவனத்தில் Instructor ஆகப் பணிபுரிய விரும்பும் பெண்கள் எதிர்வரும் (28.03.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில்வரவும்.

**இயக்குநர்,**<br>
**IIT,**<br>
K.K.S. வீதி,<br>
மல்லாகம்.

(C-33816)(38-12)

---

## இலவசம்

27.03.2004 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் பட்டமளிப்புவிழா நிகழ்வின் புகைப்படச் சுருள்களை எம்மிடம் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்வதுடன் 5 புகைப் படங்களையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**மூர்த்தி ஸ்ருடியோ**<br>
**அன் கலர் லாப்**

யாழ்வீதி, மானிப்பாய்.<br>
**T.P. 021-222 2884**<br>
(C-33824)(40-12)

---













---

## கேள்வி கோரல்

எமது பாவனையில் இருந்த 24 ஸ்ரீ 3125 இலக்க இன்ரநஷனல் (International) லொறியை விற்பனைசெய்வதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி கோரப்படுகின்றது. கூறுவிலைகளை முழு விவரங்களுடன் 05.04.2004 ஆம் திகதி திங்கட்கிழமை 12.00 மணிக்கு முன்பதாகத் *'தலைவர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி'* என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- ஐ சங்கததில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளவும்.

10.04.2004 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விவரங்களைச் சங்கத்தின் தலைமைக் காரியாலய கடமை நேரத்தில் அறிந்துகொள்ளவும்.

**தலைவர்,**<br>
சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ.து.).

(C/33811)(34-24)

---

## முதலாம் ஆண்டு நிறைவு நாளில் ஈரவிழிகளுடன் நாம்

| எங்களுக்காக | | தெய்வத்துக்காக |
|---|---|---|
| 26 |  | 07 |
| 03 | | 04 |
| 1949 | | 2003 |

**திருமதி பவளராணி தலையசிங்கம்**

*ஆயிரம் உறவுகள் வந்துபோகும்*<br>
*அனைத்துமே அடுத்தநாள் மறந்து போகும்*<br>
*உங்களில் நாம்கொண்ட உறவுதனை*<br>
*எப்படி மறந்து நாம் வாழ்ந்திருப்போம்.*

*56/12, ஆத்திசூடி வீதி,*<br>
*கந்தர்மடம் மேற்கு,*<br>
*யாழ்ப்பாணம்.* (30032)(12-40)

**- கணவர், மக்கள், மருமக்கள், பேரமக்கள்.**

---

## கண்ணீர் அஞ்சலி

எமது மகாவித்தியாலய ஆசிரியை திருமதி நிகிலாதீஸ்வரி அவர்களின் அன்புக் கணவர்

### நாகநாதன் உதயகுமார்

அவர்கள் 13.03.2004 அன்று லண்டனில் இயற்கையெய்தியமை குறித்து நாம் மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*பண்ணாகம்.*<br>
(30022) (24-12-40)

கல்விச் சமூகத்தினர்,<br>
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்.

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சேதுப்பிள்ளை கந்தசாமி

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சேதுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று (24.03.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தசாமி (நீதிமன்றம், சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் சுதாகரன், சுதர்சினி (நீதிமன்றம், சாவகச்சேரி), உமாகாந்தன் (பொலீஸ்நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற பொன்னையா - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம், செல்லையா, புவனேஸ்வரி (குடும்பநல உத்தியோகத்தர், கரவெட்டி), சறோசாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி (கனடா), நவரட்ணமலர் (லண்டன்), யோகராஜா (கனடா), கிருஸ்ணகுமாரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2004) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளாம் போக்கட்டி கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளாம்போக்கட்டி,*<br>
*கொடிகாமம்.* (30025)(38-12-40)

தகவல்:<br>
வே.இரத்தினராசா.<br>
(மைத்துனர்)

### திருமதி தம்பிப்பிள்ளை இரத்தினம்

நவாலியைப் பிறப்பிடமாகவும், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இரத்தினம் நேற்று (24.03.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிள்ளையின் அன்பு மனைவியும் கௌரியின் அன்புத் தாயாரும் உதயகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், இராசம்மா, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, நாகலிங்கம், தங்கம்மாவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (25.03.2004) வியாழக கிழமை மாலை 3.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*157,நாயன்மார் வீதி,*<br>
*நல்லூர்,*<br>
*யாழ்ப்பாணம்.* (30026)(12-40)

தகவல்:<br>
உதயகுமார்.<br>
(மருமகன்)

# வாக்காளர் அட்டை விநியோகம் இன்று மாலையுடன் பூர்த்தியாகும்

## மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்25

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் இன்று மாலை ஆறு மணிவரை நடைபெறும்.

யாழ் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

வாக்காளர் அட்டை விநியோகம் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் கடந்த 17ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை ஆறுமணியுடன் சகல பகுதிகளுக்குமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி பூர்த்தியாகும்.

இதேவேளை -

வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை அந்தந்தப் பகுதிகளிலிலுள்ள தபாலகங்களுக்கு நேரில் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நேற்றுமுன்தினம் வரை யாழ் குடாநாட்டில் 75 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டு விட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-7)

# வல்லுறவு புரிய முயன்ற இரு இளைஞர்கள் கைது!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா,மார்ச்25

- வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இரண்டு யுவதிகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றவர்கள் என்று கூறப்படும் இரு இளைஞர்கள் வவுனியா மாவட்ட அரசியல்துறையினரால் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி யுவதிகள் இருவரையும் வாகனம் ஒன்றில் கடத்திச்சென்ற பிரஸ்தாப இளைஞர்கள் ஆள்கள் இல்லாத வீடு ஒன்றில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்றும் -

இதுகுறித்துத் தகவல் அறிந்து கொண்ட விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் குறித்த இளைஞர்கள் இருவரையும் கையும் மெய்யுமாகப் பிடித்துப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

(ம-4-164)




# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பொன்னுத்துரை

பல்லாலி கிழக்கு, செட்டி வேம்படியைப் பிறப்பிடமாகவும் தற்போது அளவெட்டி வடக்கு பெரிய கிணற்றடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னுத்துரை நேற்று (24.03.2004) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னார் தங்கச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ராசமணி, ராஜகோபால், நந்தகோபால், கோபால் மற்றும் கிருஷ்ணகோபால் (ஜேர்மனி), ராசநாயகி, ஆனந்தகோபால் ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, முத்துத்தம்பி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலசுப்பிரமணியம், பத்மாவதி, இராசராணி, இராஜேஸ்வரி, விஜியதேவி, காலஞ்சென்ற குணரட்னம், ஞானசரஸ்வதி ஆகியோரின் மாமனாரும் தருமராசா, தர்மலிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற தர்மகிருஷ்ணன், தர்சினி, இராசகுமார் (லண்டன்), வரதகுமார், சுரேஸ்குமார், நிஷா, நிதர்ஷன், கஜானா, கஜானி, கம்ஷினி, கோகுலராஜா (ஜேர்மனி), தர்மகுலராஜா (ரமேஸ்), அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் தர்ஷகன், தர்ஷிகா, தஜீபன், தர்ஷினி ஆகியோரின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2004) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய கிணற்றடி,*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.* (30034)(12-40)

தகவல்:
பொ.ஆனந்தகோபால் (மகன்),
கு.தர்மகுலராஜா (பேரன்).

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்25

பலாலி ஆசிரிய கலாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பேராசிரியர் க.சின்னத்தம்பியும் அவரது துணைவியாரும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (எ)

## ஆட்சிக்கு வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் பிரதிநிதித்துவம் அங்கீகரிகக்கப்படவேண்டும் என்பது ஏற்கனவே எமது நிலைப்பாடாக இருந்துள்ளது. இந்த விடயங்களை பேச்சு ஆரம்பித்ததும் கலந்துபேசி நல்ல முடிவுக்கு வருவோம். வெகுவிரைவில் இந்த விடயங்களுக்கு முடிவுகாண்போம்.

தங்கள் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை ஏற்கின்ற எந்த அரசுடனும் பேச்சு நடத்த தாங்கள் தயார் என்று விடுதலைப் புலிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர். ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான ஆட்சி முறைமையை வழங்குவதற்குப் புலிகளுடன் நாங்கள் இணக்கம் கண்டுள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ ஒற்றையாட்சியின் கீழான நிர்வாகத்தையே புலிகளுக்கு வழங்க முன்வந்துள்ளது. அதனைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்கள் என நான எண்ணவில்லை.

*கேள்வி:* தம்மோடு பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என்று ஜனாதிபதி குமாரதுங்க கூறியிருக்கிறாரே?

*பிரதமர்:* ஜனாதிபதி அவ்வாறு கூறியுள்ள போதிலும் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அதனை மறுத்துள்ளதாகவே நான் அறிகிறேன்.

இவ்வாறு பிரதமர் 'சிரச' தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்தார்.

இதேவேளை -

பி.பி.ஸி. உலக சேவைக்கு அளித்த மற்றொரு பேட்டியில் கிழக்கு மாகாண நிலைமை குறித்து பிரதமர் பிரஸ்தாபித்தார்.

அதில் அவர் கூறியதாவது:-

கிழக்கில் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இழந்திருக்கின்றபோதிலும் அவர் அமைதி முயற்சிகளிலும் சமாதானப் பேச்சுக்களிலும் மேலும் திடமான விழிப்போடுதான் இருக்கிறார் என நான் இன்னும் முழுமையாக நம்புகிறேன். போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கே அனைவரும் விரும்புகிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று எமது கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தால் ஜனாதிபதி குமாரதுங்கா தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சை தன்வசமே வைத்திருக்கப்போவதாகப் பிடிவாதம கொள்ளாமல் அரசின் கையில் அதனை வழங்கிவிடவேண்டும்.

- இவ்வாறு பிரதமர் கூறியிருக்கிறார். (ஐ-9)

**கிறிஸ்ரல் சென்ரர்**
- நெல்லியடி -

**O/L DAY CLASS**

*ஆரம்பம்: 27. 03. 2004*
*காலை 9. 00 மணி*

தூரஇடத்து மாணவர்களின் வசதி கருதி காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணிவரை வகுப்புகள் நடைபெறும்.

கணித பாடம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

**A/L 2006 புதிய பிரிவுகள**

*ஆரம்பம்: 27. 03. 2004*
*மாலை 3. 30 மணிக்கு*

பாடங்கள்: வர்த்தகம், கலை, கணிதம், விஞ்ஞானம்.

(3382)(39)

## ஆங்கிலப் பாட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் சித்தியடையாத காரணத்தால் கலை மற்றும் வர்த்தக பீட மாணவர்கள் 300 பேர் இந்த ஆண்டு தமது பட்டத்தைப் பெறமுடியாத நிலை உருவானது. இது குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஏற்கனவே துணைவேந்தருக்கு தெரியப்படுத்தியிருந்தது. அது தொடர்பாக மாணவருக்கு சாதகமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாததனைக் கண்டித்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்றுமுன்தினம் முதல் போராட்டத்தில் குதித்தனர்; பல்கலைக்கழக கல்விக்கிளை அலுவலகத்தை மூடி ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டனர். எனினும், நேற்று முன்தினம் மாலையில் பல்கலைப் பாதுகாப்பு ஊழியர்களின் உதவியுடன் அலுவலகம் திறக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு கல்விக்கிளை அலுவலகம் திறக்கப்பட்டதை ஆட்சேபித்த மாணவர்கள் நேற்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டப வாயிலைப் பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மாணவர்களின் அமைதியின்மை குறித்து ஆராய்வதற்காக நேற்றுக் காலையில் பல்கலைக்கழக இராமநாதன் மாநாட்டு மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை பட்டமளிப்பு விழாவினை நடத்துவது எனவும, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான மீள்பரீட்சையினை ஒரு மாதகாலத்துள் நடத்தி அதில் சித்தியடைபவர்களுக்கான பட்டச் சான்றிதழ்களை மூன்றுமாத காலத்தினுள வழங்க நடவடிக்கை எடுப்பது என்றும அந்தக் கூட்டத்தில் தீமானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பல்கலைக் கழகத்தின் பதிவாளர், அனைத்துப் பீடபீடாதிபதிகள், கலை மற்றும் வர்த்தக பீட மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஐ-6-9-ரி)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் அனாமதேயத் தகவல்களை வழங்கி மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையல் ஈடுபட்டு வந்தனர் என்றும் அதனால் இவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிககப்பட்டுள்ளது.

(ஐ-9-ரி)

## ஜி.சீ.ஈ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை வழங்கும் தனியார் நிலையங்களிலும் பரீட்சார்த்திகள் குழுமியிருந்தனர்.

பரீட்சைப் பெறுபேறுகள் வார இறுதியில் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## கருணா என்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பகரமான நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு புலிகள் பலவீனமடைந்து விட்டனர் என்று பேரினவாத சக்திகள் கணக்குப் போடலாம்.

புலிகள் பலவீனப்பட்டுவிட்டதாக எண்ணிக்கொண்டு செயற்பட்டால் அவர்கள் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும். 1995இல் ஜனாதிபதி சந்திரிகாகூட இப்படியான ஒரு கனவுடன் இருந்தார். புலிகளை அழித்துவிட இதுதான் தக்கதருணம் என்று பகல் கனவு கண்டு பலவிதமான படை நடவடிக்கைகளை எம்மீது மேற்கொண்டார். ஆனால், நாங்கள் அந்தப் படை நடவடிக்கைகளுக்கெல்லாம் பதிலடியாக பலத்த - எதிர்பாராத - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தாக்குதல்களை நடத்தி எமது பலத்தை நிரூபித்தோம். இப்போதும் நாங்கள் பலமாகவே இருக்கின்றோம் இதை எவரும மறந்துவிடக்கூடாது.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்தார். (ஐ-ரி)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி நவரத்தினம் (லோயர்)

தெல்லிப்பழை, வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் அவர்கள் நேற்று (24.03.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ராமு ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சோதிமணியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*சோடாக் கம்பனி ஒழுங்கை,*
*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.* (30033)(38-12)

தகவல்:
மனைவி.

## திருமதி லூர்த்தம்மா சூசைப்பிள்ளை (பூமணி)



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூர்த்தம்மா (பூமணி) சூசைப்பிள்ளை நேற்று (24.03.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சலமோன் சூசைப்பிள்ளையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை, எலிசபெத் (இராசேந்திரம்) ஆகியோரின் அன்பு மகளும மரினாவின் (டக்கி) அன்புத் தாயாரும் அல்பிரட்டின் (உருக்குக் கூட்டுத்தாபன விற்பனை முகவர்) அன்பு மாமியாரும் நீல் மரின் (லண்டன்), நொயலின் மரின், நொயல் மரின், நெல்சி மரின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.03.2004 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஆவே மரியா"*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (30030)(40-12)

தகவல்:
அல்பிரட்
(மருமகன்).



கொடிய யுத்தம் மீண்டும் ஏற்படாது தடுத்து பேச்சு வார்த்தையைத் தொடர............

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

க.சுரேஷ் பிரேமச்சந்திரன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.03.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.